ஆரம்பக் கல்வி

உ 3-4.

ஜூன், ஜூலை

1934.

T15·ஈ2ll,N33
N34·2·3-4
190336


1228
1228
2 — 374

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் .... | 49 |
| ஆசிரியர்களும் பொது ஜன சேவையும் .... | 50 |
| கல்விச் சங்கங்கள் .... | 54 |
| பரீக்ஷாதிகாரிகள் .... | 57 |
| ஆசிரியர் யார் ? .... | 59 |
| வாழை .... .... | 60 |
| கல்வி .... .... .... | 64 |
| சைவ சமயம் .... .... | 66 |
| தேசமே தெய்வம் .... | 69 |
| கமலாபாய் கடிதங்கள் | 72 |
| மணித்திரட்டு .... | 75 |
| உதய குமாரன் .... | 77 |
| போட்டா போட்டி .... | 81 |
| சங்கக் குறிப்புகள் .... | 88 |

JL
T15m211,N33
N34.2-3-4
190336

உள் நாடு விலை அணா 1½ மலர் 3, 4. வெளி நாடு அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட

| | |
|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன், | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு .... .... | 2 0 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்கா போர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி', என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தக்கம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:

பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் | ஒரு தடவைக்கு | ரூ. | 10 0 0 |
| அரை பக்கம் | ,, | ,, | 5 0 0 |
| கால் பக்கம் | ,, | ,, | 3 0 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

OFFICE OF THE ... 10 JUN 1935

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்த பத்திரிகை.

பத்திராதிபர்: **பி. வீரராகவன்**
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர் - 2. } 1934ஹு ஜூன், ஜூலை. { இதழ் - 3, 4

## கடவுள் வணக்கம்

"இளவேனில் மாலையாய் குளிர்சோலையாய்
மலரிலஞ்சி பூம் பொய்கை யருகாய்
எற்ற சந்திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்கும் ஆரமிய வணையுமாய்!
தளவேயும் மல்லிகைப் பந்தாய், பால்போல்
தழைத்திடும் நிலாக்காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறை நரம்புளவீணை
தன்னிசைப் பாடலிடமாய்!
களவே கலந்த கற்புடைய மடவால்புடை
கலந்த நய வார்த்தையுடனுய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடித்
தழல் நிழல் சுகம் நிகருமோ?"

# ஆரம்ப ஆசிரியர்களும் பொதுஜன சேவையும்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நமது இந்திய நாடானது பலஜில்லாக்களாகவும், தாலுக்காக்களாகவும் வகுக்கப்பட்டு, பற்பல ஹிந்து, மகம்மதிய அரசர்களாலும் சிற்றரசர்களாலும், ஜமீன்தாரர்களாலும், சேனைத் தலைவர்களாலும், வீரப் பெண்மணிகளாலும் ஆளப்பட்டு வந்தது. ஆனால் அக் காலத்தில் நாட்டை யாண்டவர்கள் பெயரளவில்தான் ஆண்டார்களேயொழிய உண்மையில் நாட்டை ஆண்டவை பலதிறப்பட்ட சபைகளேயாம். மேற் குறிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒருவித சபையை ஏற்படுத்தித் தங்கள் தங்கள் இராஜ்ஜியங்களை செவ்வையாக பரிபாலித்து வந்தனர். நம்மவரில் பலர், 'ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் ஏற்பட்ட பிறகே ஜில்லாக்களும், தாலுக்காக்களும் ஏற்படுத்தப்பட்டன ; லோகல் பஞ்சாயத்து போர்டுகள் உண்டாயின, நியாய ஸ்தலங்களும், போலீஸ்டிபார்ட் மெண்டுகளும் ஏற்படுத்தப்பட்டன,' என்னும் அபிப்பிராயத்தை யுடையவர்களா யிருக்கின்றனர். அக்பர் அரசாட்சியைப் பற்றிப் பிரெஞ்சு, போர்ச்சிகீஸ், இங்கிலாந்து முதலிய அன்னிய நாட்டுப் பிராயணிகர்கள் எழுதியுள்ள தேச சரித்திரத்தை வாசிக்கின் நமது நாடு அக்காலத்திலிருந்த சீரும், சிறப்பும், அரசாங்கமென்ற மதிப்பும், பொதுச் சபைகளின் அங்கத்தினர்களின் தாரதம்மியமும் தற்போது நம்நாடு சீர்கேடடைந்திருக்கும் நிலையும் நன்றாக விளங்கும்.

உதாரணமாக அக்காலத்தில் பஞ்சாயத்து முதலிய பொதுச் சபைகளுக்கு அங்கத்தினராக நிற்பவர்கள், மதுபானம் முதலிய லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கலாகாது, இராஜ தண்டனை அடைந்திருக்கக்கூடாது. கடன்காரர்களாகவோ, சோரத்தன்மை யுடையவர்களா

190336 T15-211,433
434.2.3-1



கவோ இருக்கக் கூடாது. ஈஸ்வர பக்தியுடையவர்களாகவும், இராஜ பக்தியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். நான்கு வேதங்களில் ஒன்றையேனும் தெளிவாய்க் கற்றிருக்கவேண்டும். தற்காலத்தில் எலக்ஷனில்நிற்கும் அபேக்ஷகர்களுடைய குணங்களைப்பற்றி வாசகர்களே சற்று யோசிப்பின் நன்றாக விளங்கும். அக்காலத்தில்அரசாங்க சபைகளிலும், மற்ற பொதுச் சபைகளிலும், பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களே பெரும்பாலும் நிறைந்திருந்தனர். அதற்குக் காரணம் மேற்குறித்த குணங்களெல்லாம் ஆசிரியரியர்களிடத்துப் பெரும்பாலும் அமைந்திருந்தன. இக்காலத்து ஆசிரியர்களிடத்திலோ, மேற்குறித்த அம்சங்களில் சிறிதளவாயினும் இருப்பதாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணங்கள் பல உள. இதற்கு ஆசிரியர்களும் அரசாங்கமும் ஓரளவு பொருப்பாளர்களாவர்.

இவ்விதம் அருங் குணம்வாய்ந்த ஆசிரியர்கள் நிறைந்த சபையால் ஆளப்படும் தேசம் கூடுமான வரையில் நன்றாகவே நடைபெறுமென்பதற்கு ஐயமில்லை. ஆனால் தற்காலத்து லோகல்போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத்து, முதலிய பொதுச் சபைகளிலிருக்கும் பெரும்பாலாரான அங்கத்தினர்கள் மிகுதியும் மேற்குறித்த அம்சங்களுக்கு எதிர்மாறானவர்களாகவே இருக்கின்றனர். பெரும்பாலும் வியாபாரிகள், லாயர்கள், கண்டிராக்டுக்காரர்கள், வட்டி சம்பாதித்து ஜீவிக்கும் பணக்காரர்கள் ஆகிய இவர்களெல்லாம் நியாயத்தைக் கைப்பிடித்தால், பணம் எவ்வாறு சம்பாதிக்க முடியும்? எலக்ஷனில் செலவு செய்யப் பணம் எங்கிருந்து வரும். 'குணம் குப்பையிலே பணம் பந்தியிலே' என்ற பழமொழிப்படி நல்ல குணமுள்ளவர்களுக்கும், வாசித்தவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இக்காலத்தில் பெரும்பாலும் பொதுச் சபைகளில் இடங் கிடையாது.

பிரபுக்களிடத்தில் போட்டிப் போடவும் ஆசிரியர்களால் முடியாது. தற்போதுள்ள பொதுச்சபைகளில் ஆசிரியர்கள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், பொது மக்களும், அரசாங்கமும் ஆசிரியர்கள் பொதுஜன சேவைக்கு அருகரல்லரென்று நினைத்து வருவதே யாகும்.

பொதுஜன சேவைக்கு ஆசிரியர்களே மிக்க திறமை வாய்ந்தவர்கள். ஏழைமக்களிடம் பழகுவதால் அவர்களது கஷ்ட நஷ்டங்களை நன்ருக கண்டுணர்ந்தவர்கள். பணத்திற்கு எதையும் செய்யத் துணியாதவர்கள். முன் பின் யோசிப்பவர்கள். நியாய,அனியாயத்தைத் தெரிந்து நடப்பவர்கள். தைரியமாகத் தன்னுயிரையும் பாராது சுகதுக்கத்தையும் கவனியாது நாட்டிற்கு உழைப்பவர்கள் ஆசியர்களேயாவர். இதற்கு அத்தாட்சி கோகலே, ரைட்-ஹானரபில் ஸாஸ்திரியார், திலகர் முதலிய ஆசிரியர்களே யாவர். தற்போது எலக்ஷனில் நிற்பவர்களெல்லாம் கிராமாந்திரங்களில் ஆசிரியர்களின் தயவை நாடி நிற்கின்றனர். ஆனல் காரியம் தீர்ந்ததும் ஆசிரியர்கள் அவர்கள் வேலையாட்கள் தாம். ஆகலின், பொதுச் சபைகளில் ஆசிரியர்கள் ஸ்தானம் வகிக்கவேண்டுமென்பது மிகவும் முக்கியமான விஷயம். எக்காலத்தில் இப்பொதுச் சபைகளில் ஆசிரியர்களும் ஏழை மக்களும் அதிகமாக வருகின்றனரோ, அக் காலத்தில் தான் நமது நாட்டிற்கு க்ஷேமம். ஆனல் இப்போது ஆசிரியர்களின் நிலையென்ன? எலக்ஷனில் நிற்க பொருள் கிடையாது. பொதுஜன ஓட்டுச் செல்வாக்கு அதிகம் கிடையாது. வோட்டர்களெல்லாம் பெரும்பாலும் பணக்காரர்கள். பணப்பையை அவிழ்த்தால்தான் காரியம் ஜெயிக்கும். இந்தப் பாழும் எலக்ஷனில் பணத்தைச் செலவழித்துவிட்டு இருந்த இடம் தெரியாமல் போன குடும்பங்கள் எத்தனை!



இந்த நிலையில் நமக்கு உதவி செய்யவேண்டியது அரசாங்கமேயாம். ஒவ்வொரு பொதுஸ்தாபனங்களிலும் ஆதித்திராவிடர்களுக்குத் தனித் தொகுதி கொடுப்பது போல ஆசிரியர்களுக்கும் அந்தந்த ஜில்லா போர்டுகளிலும், முனிசிபாலிடிகளிலும் சில ஸ்தானங்களைக் கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். உதாரணமாகச் சென்னைக் கார்ப்பரேஷனில் வியாபாரச் சங்கங்களுக்கும், தொழிலாளிகளுக்கும் ஸ்தானம் கொடுக்க அங்கத்தினர்களுக்கு யோசனையிருக்கிறதே யொழிய ஆசிரியர்கள் சங்கத்தைக் கவனிக்காமல் விட்டிருப்பது என்ன காரணமோ தெரியவில்லை. ஆதலின் அரசாங்கத்தார் இதை நன்ருகக் கவனித்துச் சென்னையில் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கும் ஆசிரிய மானேஜர்கள் சங்கத்திற்குக் குறைந்தது 1 ஸ்தானமாவது சென்னைக் கார்பரேஷனில் கொடுக்க தற்போது யோசனையிலிருக்கும் முனிசிபல் திருத்த மசோதாவில் ஏற்பாடு செய்வார்களென்று நம்புகின்ருேம். இம்மாதிரியே நமது மாகாணத்திலுள்ள பல ஆசிரியர் சங்கங்களும், ஆசிரிய மானேஜர்கள் சங்கங்களும் கிளர்ச்சிசெய்து மகாநாடுகள் கூட்டிப் பல தீர்மானங்களைச்செய்து அரசாங்கத்தை அணுகுவார்களானல் பொது ஸ்தாபனங்களிலும் ஆசிரியர்கள் நுழைந்து பொதுஜன சேவை செய்வதுடன் தங்கள் குறைபாடுகளும் ஒருவாறு நிவர்த்தியாகுமென்பதில் ஐயமில்லை. ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்வார்களாக.

# 'கல்விச் சங்கங்களும், கவர்ன்மெண்டார் பொறுப்பும்'

(பி. கே. இராமய்யர்.)

1. சங்கம் என்பது பல இடத்துமுள்ள பலதிறப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்தோர் சிலர் கூடும் இடத்தைக் குறிக்கும். அத்தகைய சங்கங்கள் அனேகம் வெகுகாலம் முதற்கொண்டு நம் நாட்டிலும் இருந்து வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்துடன் தொடங்கிச் சில காலத்திற்குள் அதனதன் நோக்கத்தை நிறைவேற்றக் கூடும். ஆனால் அங்கத்தினர்களின் திறமைக்கும், அளவுக்கும், வேலை செய்யும் ஊக்கத்திற்கும் தகுந்தபடியே பலன் கிடைக்கும். எப்படி இருப்பினும் தனிப்பட்ட ஒருவர் செய்யும் வேலையைக் காட்டிலும் பலர் சேர்ந்த ஒரு சங்கம் அவ்வேலையை மிகவும் எளிதாகவும் சீக்கிரத்திலும் ஒழுங்காகவும் செய்து முடிக்கக் கூடும். இதுபற்றியே வெகுகாலம் முதற்கொண்டு நாகரீகம் முதல் இராஜரீகம்வரை யாவும் ஒவ்வோர் சபையாரால் கவனிக்கப்பட்டே வந்திருக்கின்றன. கிராம பரிபாலனம் முதல் பாராளும் மன்றம்வரை பலதிறப்பட்ட சபைகளும் சங்கங்களும் கலந்துழைப்பதுதான் சாலச் சிறந்ததென பலதேசத்து மக்களும் கண்டறிந்து அதன்படி நடந்து வருகின்றனர்.

2. கால மாறுபாட்டிற்கேற்ப அவற்றின் பெயர்களும் அமைப்புகளும் பற்பலவிதமாக மாறுபடினும், தாம் கொண்ட நோக்கத்தை எளிதில் முடிக்கும் கருத்தையே முடிவாகக் கருத வேண்டும். இத்தகைய சங்கங்கள் பலவற்றில் முக்கியமானதும் முதன்மையானதுமாகிய ஆரம்பக் கல்வியைப் பரப்பும் வேலையை ஏற்றுக் கொண்டிருக்கும், சங்கங்கள் சிலவற்றைக் குறித்துச் சிந்திக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

சில காலமாக ஜில்லா கல்விச் சபையும், பல வகைப்பட்ட லோகல் போர்ட் சபைகளும் இவ்வேலையை மேற்கொண்டுசெய்தும், முடிவில் இதன் பலன் திருப்திகரமாயில்லையென்று அரசாங்கத்தாரால் அறியப்பட்டுச் சமீபத்தில் சிற்சில மாறுபாடுகள் ஏற்படப் போவதாகத் தெரிகிறது.



3. எவ்வித மாறுபாடுகள் ஏற்படினும் அவ் ஸ்தாபனங்களுடன் (சபைகளுடன்) ஆரம்பாசிரியர் சங்கம், பெற்றோர் சங்கம் ஆகிய இவற்றையும் பலப்படுத்தி இணைத்துக்கொள்ளாவிடின் இவற்றின் உருவம் இரண்டு கையும் இல்லாத உடலுக்கு ஒப்பாகும். போதுமான பணமும், நேரான அதிகாரமும் இன்றி, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கும் இந்நிலையில் திருப்திகரமான பலன் ஏற்படுவது இயலாத காரியமேயாகும். தற்போதைய நிலையால் சில பாடசாலைக் கட்டடங்களும், தளவாடங்களும், அதிகரித்தனவே யன்றி, பாடசாலைக்குவரும் சிறுவர்களோ கல்வி அபிவிருத்தியோ அதிகரிக்கவில்லை. இதற்கு மாறாகச் சிறிய கிராமந்தோறும் குறைந்த செலவில் நடத்தப்பட்டுவந்த சொந்த பாடசாலைகள் (எய்டெட் ஸ்கூல்ஸ்) நாளடைவில் மூடப்பட்டு வருகின்றன. கட்டாய இலவசக் கல்வி ஏற்பட்டிருக்கும் இரண்டொரு இடங்களிலும் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் சங்கியை மொத்தத்தில் குறைந்துதான் இருக்கிறது. ஆதலால் பெற்றோர், ஆசிரியர், நிர்வாகிகள் ஆகிய இந்த மூவரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் முக்கியமானது.

4. இதன் அவசியத்தை யுணர்ந்து வரப்போகும் சீர்திருத்தங்களில் இதற்கு வேண்டியதைச் செய்யாமல் வேறு பெயர் பூண்ட இதுபோன்ற சம்பந்தமற்ற சங்கத்தினாலும், கலாசாலைப் பட்டதாரிகளாலும் இக்கலை எளிதில் பரவிவிடக்கூடும் என்று எதிர்பார்ப்பதற்கிடமில்லை.

சிறு வயது முதல் நகரவாசத்திலும் நவநாகரிகத்திலும் வாழ்ந்து வந்த கலாசாலைப் பட்டதாரிகள், பெயரே கேட்டறியாததும் நடந்தே சென்று அடைய வேண்டியதுமாகிய கிராமங்களுக்கும், பொருட் செலவிட்டாலும் சுயமுயற்சியின்றி வேண்டியவற்றைப் பெற முடியாததுமாகிய இடங்களுக்கும் சென்று, வாழ்க்கை நடத்த எத்தனைபேர் மனம் துணிவார்கள் என்பதை சிந்திப்போர் அறியலாகும். அவர்களை நோவதிலும் பயன் என்? கல்வி முறையில் தொழிற்கல்வி, தேசபக்தி, கிராம முன்னேற்றத்திற்கான வழிகள், பரோபகாரம், முதலியவற்றை செவ்வனே போதிக்காமல் பட்டமளிப்பு விழாக்களிலும் மேடைப் பிரசங்கங்களிலும் உபதேசிப்பதனால் மட்டும் பலன் ஏற்பட்டு

விடுமா! நூற்றுக்கு எவ்வளவு பேர் இந்த உபதேசத்தை வேத வாக்காக கொண்டு வேலைசெய்ய முன்வருவர்? வேறு வழியின்றி இத்துறையில் வேலை செய்ய முற்படும் இரண்டொருவரையேனும் உற்சாகப்படுத்த என்ன சாதனங்கள் இருக்கின்றன? கிராம வாசிகளின் உணவும் உடையும் மனநிலையும் அறிவும் கண்டு பரிதபிக்க நேரிடுகிறதேயன்றி அவர்களுடன் நெருங்கிப் பழகி வேண்டியவற்றைச் செய்து கொடுக்கச் சக்தியற்று வெறுப்படைய நேரிடுமென்பதை அனுபவசாலிகள் அறிந்திருப்பார்கள். இவர்களை ஒருவாறு முன்னேற்றி ஒத்துழைப்பைப் பெறவேண்டிய அவசியத்தை அரசாங்கத்தார் அறிந்து அதற்கான வழிகளில் ஆசிரியர்களுக்கு உதவிபுரிவது முதற்கடமை யாகும்.

5. ஆனால் இது போன்ற முறைகள் அரசாங்கத்தாரின் செவிகளில் புகுவதில்லை. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கேட்க நேரிட்டாலும் எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பது கூடாதென்றும் கூடுமானவரையில் ஜனப்பிரதிநிதிகளடங்கிய (லோகல் போர்ட்) சபைகளையும், சங்கங்களையுங்கொண்டு சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், தாங்களும் தங்களால் ஆனதைச் செய்வதாகவும், பொறுப்புள்ள அதிகாரிகளே மிகவும் இனிமையாக முக்கியமான சமயங்களில் பேசி முடிக்கிறார்கள். ஷை லோகல்போர்டு சபைகளின் அமைப்பும், நிர்வாகமும் உலகறிந்த இரகசியமாகிவிட்டது. அதுபற்றி விவரிக்கின் பெருகும்.

ஆதலால் நம் சமூகம் முன்னேற நமது சங்கத்தையே அடிப்படையாகக் கொண்டு உருவான வழிகளில் உழைத்தலே, நமது வெற்றிக் கறிகுறியாகும்.

(தொடரும்)

---

# கல்விச் சபைகளும் பரீக்ஷாதிகாரிகளும்

(பி. பரிமணப் பல்லவராயர்)

திருச்சி ஜில்லா கல்விச் சபையின் மாதாந்தர மீட்டிங்கொன்று 28—3—34-ல் கல்விச் சபையின் ஆபீஸிலே நடைபெற்றது. உப தலைவர் திருமிகு. எல். என். பரமசிவம் பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்தார். கவனித்தவை பல விஷயங்களில், முசிரி தாலூகா மகாதேவி நேஷனல் பாடசாலையின் அங்கிகார விஷயமும் திரவிய சகாய விஷயமும் ஒன்றாகும். இப் பாடசாலை சென்ற 22—4—1930-ல் ஆரம்பிக்கப்பட்டு நாளதுவரையில் நன்கு நடைபெற்று வருகிறது. இதன் திரவிய சகாயத்துக்காக இப் பாடசாலையின் மானேஜரால் பரீட்சாதிகாரிக்கு 31-32-ம் வருடத்துக்கு மனு போடப்பட்டது. இம் மனு அதிகாரிகளால் கவனிக்கப்படாமற் போகவே 32-33-ம் ௵ திரவிய சகாயத்துக்கு மனு போடப்பட்டது. மானேஜர் காங்கிரஸில் சம்பந்தப்பட்டவரென்று திரவிய சகாயம் அவ் வருடத்துக்குக் கொடுக்க முடியாதென்றும் அங்கீகாரம் அளித்திருப்பதாயும் தெரியவந்தது. பிறகு 33-34-ல் திரவிய சகாயத்திற்கு மனு போட்டதின்பேரில் பரீட்சாதிகாரி பாடசாலையைப் பார்வையிட்டு வெகு நன்றாய் நடைபெறுகிறதென்றும், திரவிய சகாயம் அளிக்கப்படவேண்டுமென்றும் எழுதினதாகவும், பிறகு 23–12–33-ல் வருடாந்திர பரீக்ஷை நடத்தி மானேஜரின் பேரில் சொந்தப் பொறாமையும், வருத்தமும் கொண்ட சிலரின் தூண்டுதலின்பேரில் கிராண்டு கொடுக்க வேண்டிய அவசியமில்லை யென்று எழுதினதாகவும் தெரிகிறது. இவ் விஷயங்களை விளக்கிக் கல்விச் சபைக்கு மனுசெய்துகொண்டதின்பேரில், இவ் விஷயம் மேலே குறிப்பிட்ட கல்விச் சபையின் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது ஆரம்பத்தில் அக்கிராசனம் வகித்த உபதலைவர், இப் பாடசாலையை நேரில் கவனித்த கல்விச் சபை மெம்பர் திருவாளர் ஏ. வி. அரங்கசாமி ரெட்டியார் அவர்களின் ரிப்போர்ட்டு சகிதம் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளையும் வைத்துக்கொண்டு பாடசாலையின் நிலைமையை விளக்கிக் கூறிச் சபையின் அபிப்பிராயத்துக்கு அவகாசம் அளித்தார். மாஜி உபதலைவரும் மெம்பருமாகிய திருவாளர் நரசிம்மலு நாயுடு அவர்கள் முதலில் திரவிய சகாயத்துக்குச் சிபார்சுசெய்துவிட்டுப் பிறகு அதனை மறுத்த பரீக்ஷாதிகாரியின் செய்கை கண்டிக்

கத்தக்கதும், நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தக்கதுமாகும் என்று நீண்ட நேரம் பேசி சபையின் மதிப்பைவிட்டுக் கொடுக்கக்கூடாதென்பது பொருளாகச் சபையின் அதிகாரத்தைக்கொண்டு இப்பாடசாலைக்குத் திரவிய சகாயம் அங்கீகரிக்க வேண்டுமென்று பேசியதின்பேரில், ஜில்லாபோர்டு தலைவரும், பப்ளிக் பிராசிகியூட்டரும் அட்வகேட்டுமான உயர் திரு. ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமிபிள்ளை எம். ஏ. பி. எல். எம். எல். சி. அவர்களும், மெம்பர் திரு மிகு சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், மற்றும் சிலரும் தீர்மானத்தை ஆதரித்து வற்புறுத்திப் பேசியதின்பேரில் தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட தகராறுகள் எத்தனையோ வருவதும் ஆசிரிய மானேஜர்கள் அல்லற்படுவதும் நாம் கண்டு வருவதாகும். கல்விச் சபைகளில் ஆசிரிய மானேஜர்கள் மற்ற ஜில்லாக்களைப்போல் அங்கம் வகித்திருப்பார்களேயானால் 31-32-ம் வருடத்திலேயே அங்கீகாரமும் திரவிய சகாயமும் பெற்றிருக்கலாம். இந்த ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சில வருடங்களுக்கு முன்பே தங்கள் ஜில்லா சங்கத்தைக் கூட்டி, ஜில்லாபோர்டுதலைவர் அவர்கள் தலைமையிலேயே நடத்தியிருந்தும், தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமை காரணமாக அப்பதவிகளும் முயற்சிகளும், வீணாயினமை பலரும் அறிந்தது.

இதுபோது திருச்சி ரேஞ்சு ஆசிரிய மானேஜர் சங்கத்தார் இது பற்றித் தங்கள் சங்கத்தைக் கூட்டி இதன்மூலம் ஜில்லா சங்கத்தைத் திரட்ட முயற்சிப்பது நற்குறியெனலாம். இதுபோதாவது ஆசிரிய மானேஜர்கள் பொறாமைப் பேய்க்கு அடிமைப்படாது தங்கள் மதிப்பை நிலைநிறுத்தி முயற்சி வீணாகாது பலனளிக்குமாறு செய்வார்களென்று நம்புகிறோம்.

———

# ஆசிரியர் பகுதி

வசுந்தர நயினார்: தலைமை ஆசிரியர், கடலாடி,
போளூர் தாலூக்கா.

## ஆசிரியர் யார்?

[இத் தலைப்பின் கீழ் முன் சஞ்சிகைகளில் சில வியாசம் எழுதியுள்ளேன். தற்போது அதை யொட்டி உலகப்படிப்பு இன்னதென விவரித்து முடிக்கின்றேன்.]

**கிராம** உபாத்திமார்கள் புத்தகத்திலுள்ளதை மட்டும் கற்றுக் கொடுத்தால் போதாது. கிராம ஜனங்களுக்கு வேண்டிய உலக படிப்பை ஆசிரியர் அவசியம் கற்றிருத்தல் வேண்டும். அவை யாவன, சிறுகைவைத்தியங்கள், ஜோஸியத்தில் சுமாரான பயிற்சி இவை அவசியம் வேண்டும். இல்லையேல் கிராம ஜனங்களிடம் இவர் அன்புடையவராக மார்க்கமிராதென்பது திண்ணம். அப்போதுதான் நிலம், மலை, நிறை கோல், மலர் நிகர் மாட்சி என்று முன்சொன்ன விஷயத்தில் இவர் பொருந்துவார். இவரே ஆசிரியர். அவை எவ்வாறு அடைவோமெனில் கண்டதைப் படிக்கப் பண்டிதனாவான் என்பதை உறுதியாகப் பிடித்து, நம் ஆரம்பக் கல்வி என்னும் சஞ்சிகையில் ஸ்ரீமான், மன்னார்குடி ஆஸ்பத்திரியில் டாக்டராயிருக்கும் எஸ். சிவசுப்ரமண்ய அய்யரவர்கள் எழுதிவரும், கை மருந்துகள் என்ற தலைப்பைப்பார்த்துப் படித்து, இன்புறுத ஆசிரியரும் இருப்பரோ? இன்னாரைப் போன்றவர்களை அரிய விஷயங்களை எழுத தூண்டுதலல்லவோ நம் குறை யகல வழியாகும். சிறு வைத்யங்களும் சிறு ஜோஸ்யமும் இருந்தால் பெரிய சாதகத்தை உண்டுபண்ணும் அல்லவா? ஆகையால் மேற்படி அய்யரவர்களைக்கொண்டு அடுத்த சஞ்சிகையில் கை மருந்துகள் என்ற தலைப்பின்கீழ்ப் பேதி மருந்துகளில் இருக்கும் பல முறைகளையும் எழுதவும். பின் இதர அநேக மூலிகை வைத்யங்களையும் எழுத வேணுமாய்ப்பெரிதும் கோரி, அன்னார் நீடூழி வாழக் கடவுளைப் பிரார்த்திப்போமாக. ஜோஸ்ய நிபுணரும் சீக்கிரம் யாரேனும், விஷய

# வாழையும், இந்தியாவில் அதன் உபயோகங்களும்

டி. எஸ். ஐயர்.

வாழையானது உஷ்ணப் பிரதேசத்து மரம். இந்தியா முழுவதிலும் இது பயிராக்கப்படுகிறது. இது போஷணையுள்ளதும், ருசிகரமானதுமான பழத்திற்குப் பேர்போனது. இந்தியாவில் வாழையின் உபயோகங்களைக் குறித்து இங்கு சுருக்கமாய் எடுத்துரைப்போம்.

இந்தியாவில் அநேக பாகங்களில் மூன்றுவிதங்களான வாழை பயிராக்கப்படுகின்றன. அவை பச்சை வாழை, மஞ்சள் வாழை, செவ்வாழை என்பனவாம். ஒவ்வொன்றிற்கும் ருசி பேதம் உண்டு. வாழைமரமானது சாதாரணமாய் 10 முதல் 12 அடி வரைக்கும் வளரும். நதிக் கரையோரங்களில் இன்னும் அதிக உயரமாயும் வளரும். மரமும் அதில் காய்க்கும் வஸ்துக்களும் அநேகவிதமாய் உபயோகப்படுகின்றன. அவை மருந்தாகவோ ஆகாரமாகவோ உபயோகமாகின்றன. அதன் ஒரு பாகமாகிலும் வியர்த்தமாகிறதில்லை. அதன் உபயோகம் யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருப்பதுபற்றி, இந்தியாவின் சமவெளிகளில் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வோரு குக்கிராமத்திலும் இது பயிராக்கப்படுகிறது.

---

தானம் செய்ய முன்வருவார்களென எதிர்பார்க்கும் இந்த ஆரம்பக் கல்வியை ஆதரிக்கா நேசரும் உளரோ. ஆசிரிய சகோதரர்களே அவசியம் வாங்கிப் படியுங்கள். பாக்கியுள்ள 1934 ம் வருஷ ஏப்ரல் மீ ஆரம்ப சந்தா பணத்தை தவறாது அனுப்பி ஆதரியுங்கள். நான் என் சந்தா பணத்தை சம்பளத்தடையால் அனுப்பவில்லையென்றும், சம்பளம் கிடைத்தவுடனே தவறாது அனுப்பி விடுவேன் என்றும், எனக்குவரும் சஞ்சிகையை நிறுத்தாமல் அனுப்பும் படியும் கனம் பத்திராதிபரைக் கேட்டுக் கொண்டுமிருக்கிறேன். என்பதை என் சகோதர ஆசிரியர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



வாழை மரம் :— வேரைத் தவிர்த்து முழு மரமும் காயின் குலையோடு விவாகம் முதலிய விசேஷமான தினங்களில் அலங்காரார்த்தமாக உபயோகப்படுத்தப்படுகின்றன.

வேர் :— குழற்கிளை வியாதிக்கும், கண்ட மாலைக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. வேரைப் பஸ்பமாக்கி இரத்தமின்மைக்கும், கக்க கக்ஷியாவிற்கும் உபயோகப்படுத்தப் படுகிறது. அதைப் பச்சையாய்ப் பிழிந்து கஷாயமாகச் சாப்பிட்டால் குடிவெறி நீங்கும். இளம் வேரின் ரஸமானது, இரத்த ஒழுக்கை நிறுத்த உபயோகப்படும். இந்த வேரின் ரஸத்தில், சுட்ட வெங்காரம், பொட்டிலுப்பு இவைகளைக் கரைத்து மூத்திரம் தங்குவதற்குக் கொடுக்கப்படும். கடைந்த வெண்ணெயையும் சர்க்கரையும் சேர்த்து, வெட்டை ரோகத்திற்கும் கொடுக்கப்படும்.

நார் :— மேற்புறத்தின் நாரை ரஸம் பிழிந்து, பக்கக்கோளாறுகளுக்கு உபயோகப்படுத்தப்படும். குழந்தைகளுக்கு அபினி அதிகமாய்ப் போட்டுவிட்டால், அதற்கு மாற்றாகக் கொடுக்கப்படும். இந்த ரஸம், பாம்புக்கடிக்கும் எடுத்தது. நல்ல பாம்பின் விஷமாக விருந்தாலுங்கூட இந்த ரஸத்தினால் அநேக கேஸுகள் குணமாயிருக்கின்றன. இந்த ரஸத்தில் ஒரு அவுன்ஸ் எடுத்துக்கொண்டு, கடைந்த வெண்ணெய் ஒரு அவுன்ஸ் எடுத்துக்கொண்டு இரண்டையும் கலக்கிக் கொடுத்தால் அது நல்ல பேதி மருந்தாகும். இளம் பசும் நாரை சூட்டைத் தணிக்க தலைக்கு மேலே வைப்பதுண்டு. மேற்புறத்து நாரைக் கிழித்துப் புஷ்பம் கோர்ப்பதற்கும் மாலைகள் கட்டுவதற்கும் உபயோகிப்பதுண்டு. உலர்ந்த நாரை ரஸாயனப் பொருள்களைக்கொண்டு பக்குவப்படுத்தி, உறுதியாக்கி அதைக்கொண்டு துணி நெய்யப்படும். அநேக நாடுகளில் இது ஒரு கைத்தொழிலாகவும் இருக்கிறது. கையால் நெய்யப்படும் பட்டைப்போலவே அவ்வளவு நன்றாயிருக்கிறது.

இளம் தண்டு :— மரத்தினுள்ளேயுள்ள இளம் தண்டை தலையில் வைத்துக்கட்டி, உஷ்ணத்தை நிவர்த்திக்க உபயோகிக்கப்படும். இதை ஒரு பதார்த்தமாகவும் சமைத்துச்சாப்பிடுவதுண்டு. இதைத் தாராளமாய் உபயோகப்படுத்தினால் சிறு நீர் தாராளமாய் இறங்கும். இதைப் பச்சடி செய்வதுமுண்டு. இந்தத் தண்டின் ரஸமானது, கஞ்சாவின் தீக்குணங்களைப் போக்கடிக்கும். புண்

டைக் காலத்தில் உலர்ந்த நாரையும், இலைகளையும் கொளுத்தி, அந்தக் கரியிலிருந்து 'பொடாஷியம் கார்போ ஹைட்ரேட்டு' எடுப்பதுண்டு.

இலைகள் :— இந்த இலைகள், சாப்பிடத் தட்டுமாதிரி உபயோகப்படுத்தப்படும். உலர்ந்த இலைகளைத் தைத்துத் தொன்னை செய்து உபயோகப்படுத்தப்படும். தென்னிந்தியாவில் ஜனங்கள் வாழை இலையையும் வாழைத் தொன்னைகளையும், சீனா ப்ளேட்டுக்குப் பதிலாக உபயோகப்படுத்துகிறார்கள். இளம் குருத்துக்களை அழற்சி நெருப்புப்புண் இவைகளுக்கு வைத்து, குளிர்ச்சியான கட்டாகக் கட்டுவதுண்டு. வெந்த தோல் போனதும், இந்த இலையில் எண்ணெயைத் தடவி, இரணம் ஆறும்பொருட்டு, கட்டுக் கட்டுவதுமுண்டு. மேலும், இந்தக் குருத்துக்களில் மையைத் தடவி, பட்டு, கட்ட பர்சா இவைகளுக்குப் பதிலாக இரணங்களின்மேல் வைத்து அவிழ்ந்துபோகவொட்டாமல் ஒரு கட்டுக் கட்டி வைப்பதுண்டு. கொஞ்சம் முதிர்ந்த பச்சையிலைகளைக் கண்களுக்கு மறைவாகவைத்துக் கட்டுவதுண்டு.

வாழைப்பூ :— வாழைப்பூ கறிசமைப்பதுண்டு. இது மதுமேக வியாதிக்கு உபயோகமாகும். வாழைப்பூவை இடித்து ரஸம் பிழிந்து மோர் விட்டுக் கலந்து கொடுத்தால், மாத விடாயின்போது வயிற்றுவலி, மாதவிடாய் அதிகமாகக் காணல் இவைகளை நிறுத்த நல்லது.

வாழைக்காய் :— இது ஒரு உயர்ந்த ஆகார பதார்த்தம். இது ஹெமோப் டைஸிஸ், மதுமேகம் இவ்வியாதியால் வருந்துவோருக்கு மிகவும் நல்லது. இதை உலர்த்தி சர்க்கரை போட்டுச் சாப்பிட்டால், சொறி, கரப்பான் இவைகளைத் தீர்க்கும். மலையாளத்திலும் மேற்குக் கரையோரங்களிலும் ஒருவித வாழை பயிராக்கப்படுகிறது. அதைத் துண்டு துண்டாய் நறுக்கி, தேங்காயெண்ணெய் அல்லது வெண்ணெய் இதில் வதக்கப்படுகிறது. இது வெகுநாளைக்குக் கெடாமல் இருக்கும். இதையே வெய்யலில் உலர்த்தி, மாவாக்கி, குழந்தைகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கப்படும். இதில் அடை முதலியனதும் செய்வதுண்டு. இந்த மாவைக் கஞ்சி காய்ச்சிப் பால் சேர்த்துக் கொடுத்தால், அஜீரணத்தினால் உண்டாகும் வயிற்றுவலிக்கு எடுத்தது.



வாழைப்பழம் :— இது தண்டிலேயே பழுத்தால்தான் நல்லது. அதைவிட்டு வெளியே பழுத்தால், அவ்வளவு ருசியாயிராது. வாழைப்பழத்தில் எ. பி. ஸி. ஜீவஸத்துப் பொருள்கள் இருக்கின்றன. இதில் இரும்பு இருப்பதால், இரத்தமின்மையால் வருந்துவோர்க்கு எடுத்தது. இது நீடித்த சீதபேதிக்கும், மலப்போக்குக்கும் ஏற்ற ஆகாரமாகும். இதன் சரி சமானமான எடையுள்ள புளியுடன் கொஞ்சம் உப்பும் சேர்த்துக் கலந்து கொடுக்க வேண்டியது. தேனும் பழமும் சரிசமான எடை எடுத்துக்கொண்டு குழைத்துக் கொடுத்தால், மூத்திரத்தில் சர்க்கரை குறையும். இது மதுமேக வியாதியஸ்தர்களுக்கு நல்லது. வாழைப்பழத்தைப் பிழிந்து அந்த ரஸத்தைப் புளிக்கவைத்துக் கொடுத்தால், அது குன்மத்திற்கு நல்லது. வாழைப் பழத்தை நன்றாய்க் கழுவி, நான்கு அவுன்ஸ் பால் சேர்த்து, தினம் மூன்று வேளை கொடுத்தால், அது ஸ்புரூ, வயிற்றுப்போக்கு, ஸ்கர்வி முதலிய வியாதிகளைப் போக்கும். வாழைக்காயையும் குழம்பாகக் காய்ச்சி இதற்கு உபயோகப்படுத்துவதுண்டு.

விதைகள் :—சில வாழையில் விதைகள் உண்டு. இதன் ரஸம், அடிவயிற்றுள்ள அழற்சியைப் போக்கும். வயிற்றுபோக்கில் உண்டாகும் அழற்சிக்கும் இது உபயோகமாய் இருக்கும்.

தோல் :— வாழைப்பழத்தின் தோலை எரித்தால் அதன்சாம்பலில் ஸோடா இருக்கும். இதைத் துணி துவைக்க உபயோகப்படுத்தலாம். வாழை மரத்தையே எரித்தால், அதில் பொடாஷ் உப்புக்கள் இருக்கின்றன. இது மாந்தம், எரிச்சல், வயிற்றுவலி இவைகளுக்கு உபயோகமாகவிருக்கும். — (ஆரோக்கிய தீபிகை.)

# கல்வி

(எஸ். சோமசுந்தரம், எட்மாஸ்டர், நீர்மலை)

எல்லாச் செல்வங்களிலும் கல்விச் செல்வம் இன்றியமையாதது. இக்கல்விச் செல்வத்திற்குக் கரையே கிடையாது. கடலைக் கரைகாணினும் கல்வியைக் கரைகாண்ட லரிது.

2. ஆனால் நாம் கல்வியில் எத்தகைய நிலைமையிலிருக்கிறோம் என்பது நமது நாட்டில், கல்வி யறிவுடையவர்களின், தொகை மிகக் குறைவாயிருப்பதிலிருந்தே, உள்ளங்கை நெல்லிக் கனி போல், தெளிவாகிறது. நம் தாய் நாடு, கல்வியிலும், செல்வத்திலும், நாகரிகத்திலும், கைத்தொழில், வணிகம், விவசாயம் முதலிய எல்லாத் துறைகளிலும், மிகவும் முன்னேற்ற மடைந்திருந்ததாக சற்றேறக்குறைய 150, ஆண்டுகட்கு முன்னிருந்த நமது சரித்திர நூற்கள் கூறுகின்றன. இது பற்பல ஆராய்ச்சிக்காரர்களாலும் ஆராய்ந்து அறியப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. ஆனால் தற்சமயம் கல்வியில்லாத நாடென்றும் கைத்தொழில், வணிகம், முதலியவை யற்ற நாடென்றும், மனிதர்களை மனிதர் அடிமை கொள்ளும் நாடென்றும், ஒற்றுமையற்ற நாடென்றும், இன்னும் அநேக விதமாகவும் நம் நாட்டைப் பிற நாட்டினர் கூறுகிறார்கள். நம் நாட்டினர் ஏற்றத்தாழ்வு இல்லாமல், எல்லோரும், ஒருங்கே கல்வி பயின்று, சிறந்து விளங்கல்வேண்டும்.

4. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அறிவு உண்டு. அதைவளரச் செய்தால் நாம் முன்னேற்ற மடையவும் நாகரிக மடையவும் எல்லா நலன்களையும் பெறவும், நல்லன, தீயன வறிந்து, செய்யவுங்கூடும். இல்லாவிட்டால் நாம் பெற்ற அறிவு அவலமேயாகும். பிறகு நமக்கும் விலங்கினங்களுக்கும் எள்ளளவும் வித்தியாசமிராது. அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது, "கல்வி" ஒன்றேயாம். இது பற்றி அறிவின் பெருக்கம் கல்வியைப் பொருத்ததே என்பதற்கு "நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்ற ஆன்றோர் வாக்கே போதியசான்றாகும்.

5. மக்களுக்கு அறிவு வளர்ச்சி கல்வியினால் உண்டாகின்றன வென்பதையும், கல்லாத மற்றவற்றிற்கு அறிவில்லை என்பதற்கு உதாரணம்; பக்ஷிகள் எக்காலத்திலும் ஒரேவிதமாகத் தங்கள்



கூடுகளை அமைத்து வாழ்வதேயாம் மனிதர்கள் முற்காலத்தில் கட்டிய வீடுகளுக்கும் தற்சமயம்கட்டும் வீடுகளுக்கும் ஏராளமான வித்தியாச மிருக்கிறது. விலங்கு, பக்ஷி, இவைகளின் உணவுகள், முற்காலத்தைப் போலவே இருக்கின்றன. ஆனால், நாம் மாத்திரம் முன் காலத்திலிராத விதவிதமான, உணவுகளும், உடைகளும். ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். முன் காலத்தில் நான்கு மாதங்களில், செய்த, பிரயாணத்தை, இப்பொழுது நான்கு மணி நேரத்தில் செய்கிறோம். இவ்விதமான மாறுதலுக்கு ஹேதுவாகிய அறிவு வளர்ச்சிக்குக் காரணம் "கல்வி" யல்லவா? கல்வியைக் கற்கக்கற்க அறிவானது வளர்ந்து கொண்டே வரும்.

6. இதை ஒட்டித் தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர் "கற்றனைத் தூறுமறிவு" என்று அடக்கமாகக் கூறியிருக்கிறார். கற்றவர்களை எல்லோரும் விரும்புவார்கள். கல்லாதவர்களைப்பற்றி என்னதான் சொல்லக்கூடும். இது பற்றியே — திருவள்ளுவர் "யாதானும், நாடாமல், ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்று எல்லோருக்கும் இனிது தெரியுமாறு மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார். கற்றோர்கள் எங்கு சென்றாலும் பெரும்புகழுடன் வாழ்வார்கள். கற்றவர்களினுடைய பெருமையானது மன்னவர்களின் பெருமையைக் காட்டிலும், மேலானது என்பதை நன்கு தெரியுமாறு, "மன்னர்க்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார். நாம் செல்வத்தைச்சேகரம் செய்து வைத்திருந்தால் அது நல்வழியிலோ, அல்லது தீயவழியிலோ செலவழிந்துவிடும். கற்றுக்கொண்ட கல்வியானது எக்காலத்திலும், யாவராலும் கைப்பற்ற முடியாதது. இதை ஒட்டியே விவேக சிந்தாமணியில் "வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது" என்று எளிய நடையில் மிகத்தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆனது பற்றி நாம் மேலும், மேலும், கல்விகற்க வேண்டுவது, அவசியம். ஒரு நாள் முழுவதும், நாம், நமது, குடும்பசம்ரக்ஷணைக்காக உழைத்தாலும், ஒரு நாளின், சொற்பகாலத்திலாவது, கல்வியைக் கற்றுத் தேரவேண்டும்.

# சைவ சமயம்

ஆசிரியர் :

திரு. எம். பாலசுப்பிரமணிய முதலியார், பி. எ., பி. எல்.

'சித்தாந்தம்' பத்திராசிரியர், ஹைகோர்ட் அட்வகேட், சென்னை

(முன் தொடர்ச்சி)

சரியைத் தொண்டு :—சரியைத் தொண்டு என்பது கடவுளை எஜமானனாக ஒரு உருவத்தில்கொண்டு எஜமானனுக்கு ஒரு வேலைக்காரன் எந்தெந்த உபசாரங்களெல்லாம் செய்யக்கூடுமோ அவைகளையெல்லாம், அவ்வுருவத்துக்குச் செய்தல். அலகிடுதல், மெழுகுதல், பூக்கொய்தல், பூத்தொடுத்தல், இன்னும் இவைபோன்ற மற்ற காரியங்களெல்லாம் செய்தல். இவ்வாறு செய்வதால் உலகப் பொருள்களில் தான் வைத்துள்ள பற்று கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொண்டே வரும். தனக்கென ஒன்றும் செய்யாமல் கடவுளுக்கென்றே செயல்நிகழ்வதால் ஆணவமலமும் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வரும். இத் தொண்டை தாசமார்க்கம் என்றும் கூறுவது இயல்பாம்.

கிரியா மார்க்கம் :—கிரியைத் தொண்டாவது உருவத்திலே கடவுளை எழுந்தருளச் செய்து அபிஷேகம் போன்ற பதினாறு வகையான உபசாரங்களைச் செய்து, தீயை வளர்த்து அதையும் கடவுள் உருவாக எண்ணி உயிர் வதை யில்லாத வேள்வியைச் செய்தல். இங்கே 'நான்' என்ற பற்றும் 'எனது' என்ற பற்றும் மிகுதியாக நீங்கும். இம்மாதிரியான வேலை கடவுளைத் தகப்பனாகப் பாவித்துப் பிள்ளை செய்யும் உபசாரத்துக்கு ஒப்பிடப்பட்டு, கிரியைத் தொண்டுக்கு சத்புத்ரமார்க்கம் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

யோகமும் ஞானமும் :—யோகம் என்பது உடம்பின் கூறுகளை நன்றாய் அறிந்து பிராண வாயுவைத் தன் வசப்படுத்தித் தொழிற்படுத்தி உடம்பினுள்ளிருக்கும் ஒளிவடிவான கடவுளைக் கண்டு வழிபட்டு இன்பம் அடைதல். இதைக் கடவுளும் தானும் சிநேகிதர்கள்போல அளவளாவும் தன்மைக்கு ஒப்பிடுவர். இந்த வழிக்கு சஹமார்க்கம் என்று பெரியோர்கள் பெயரிட்டுள்ளார்கள். எல்லாவற்றிலும் சிறந்தது ஞானமார்க்கம். இதில் ஞான சாத்திரங்



களையெல்லாம் கசடறக்கற்று அவைகளின் முடிபுகளைத் தனது வாழ்க்கையில் பதித்து ஒழுகுவது முதலியசெயல்கள் நடைபெறும். இவ்வழியைப் புருஷன் பெண்சாதி இருவரும் களங்கமின்றி பரிசுத்தமாக நடத்தும் வாழ்க்கைக்கு ஒப்பிட்டு இதற்கு சன்மார்க்கம் என்ற பெயரைப் பெரியோர்கள் கொடுத்துள்ளார்கள்.

ஆன்ம லாபங்கள் :—இந்த நான்கு சாதன முறைகளால் ஆன்மாவுக்குக் கிடைக்கின்ற லாபங்கள் மூன்று. அவை இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பனவே. இருவினையொப்பு என்பது இன்பத்தையும் துன்பத்தையும் விருப்பு வெறுப்பின்றிக் காணுதல். மலபரிபாகம் என்பது ஆணவமலத்தினுடைய சத்தி குறைந்தொழிதல். சத்திநிபாதம் என்பது கடவுளுடைய திருவருளானது ஆன்மாவில் வந்து பதிதல். இவ்வாறு திருவருள் கைகூடினால் ஆன்மாவானது எடுத்த அப்பிறவியுள்ள வரையில் பிராரத்வ கர்மத்தை யனுபவித்துவிட்டுப் பிறகு சிவசாயுச்சிய பதவியென்ற பரமுத்தியைப் பெறும்.

எவ்வளவு ஞானம் முதிர்ந்தவனாயிருந்தாலும் கோயில் வழிபாடும் அன்பர் கூட்டுறவும் வேண்டும். இல்லாவிட்டால் ஆணவ மலம் மீண்டும் தொடர்ந்து வலிபெருக்கும். ஜீவன் முக்தனுக்கும் ஆணவ மலம் "மாயாதே தன் சக்தி மாய்ந்து" நிற்கும் நிலைதான் கிடைக்கிறது.

அணைந்தோர் தன்மை —" இந்த முடிந்த முடிபாகிய நிலையிலிருப்பவர்கட்கு, ஜாதி, குலம், கோத்திரம், நாடு, மொழி, உற்றார், உறவினர், நண்பர், பகைவர், நன்மை, தீமை முதலிய உலகத்திலுள்ள தொடர்புகள், வேற்றுமைகள் எவையும் கிடையா. இவைகள் இல்லாதிருப்பதே சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபான நிலை.

சைவ நூல்கள் :—சைவ சித்தாந்தத்தின் உண்மைகளெல்லாம் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலிய பன்னிரு திருமுறைகளிலும், சிவஞானபோதம், சித்தியார் முதலிய பதினான்கு சாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுஉளன. இம்மட்டில் சைவ சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சியை நிறுத்திக்கொண்டு மிகச் சுருக்கமாக சைவ இளைஞர்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை

களையும் செய்யவேண்டியவைகளையும் எண்ணிட்டுத் தொகுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். அவை கீழ்வருவனவேயாம்.

இருபது முடிபுகள் :—கடவுள் ஒருவர் உண்டென்று நம்ப வேண்டும். (2) அவரே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கிறார் என்று அறியவேண்டும். (3) உயிர்கள் இயல்பாகவே உலகத்திலே பற்றுடையனவாக வுள்ளன என்பதை அறியவேண்டும். (4) இந்தப்பற்று நான், எனது என்ற இருவகையாகவுள்ளதென அறியவேண்டும். (5) இவ்வுலகத்திலே உயிர்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் இப்பற்றுக்களின் காரணத்தாலே உண்டாகின்றன என்று அறிய வேண்டும். (6) உலக வாழ்வில் உயிர்கள் இன்பம் அனுபவிப்பதுபோலக் காணப்படினும் மிகுதியும் துன்பத்தையே அனுபவிக்கின்றனவென்று நன்றாய் உணர வேண்டும். (7) ஆகையால் உலகத்திலுள்ளபற்றை யொழித்தால்தான் உயிருக்கு உண்மையான இன்பம் கிடைக்குமென்று அறியவேண்டும். (8) ஆகையால் உலகப் பொருள்கள்மீதுள்ள பற்றை விட்டு கடவுள்மீது அன்பு செலுத்த வேண்டும். (9) கடவுள் உயிர்களிடத்து அளவற்ற கருணை உடையவரென்றும், தன்னைச் சரணமாக அடைந்தவர்களுடைய துன்பத்தைப்போக்கி இன்பத்தைக் கொடுக்கின்றாரென்றும் உணர வேண்டும். (10) கடவுளை அடைவதற்குச் சிறந்த உபாயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகள் என்பதை நன்குணர வேண்டும். (11) இவ்வழிகளிற் சென்றால் கிடைக்கும் இலாபங்கள் இருவினை யொப்பு, மல பரிபாகம், சத்தி நிபாதம், சிவசாயுச்சியம் என்று மிக நன்றாக உணரவேண்டும். (12) எவ்வளவு ஞானம் முதிர்ந்தாலும் திருக்கோயில் வழிபாடு, அன்பர்கள் கூட்டுறவு என்பவற்றைக் கைவிடக் கூடாது என்று அறிய வேண்டும். (13) எக்காலத்திலும் எல்லாவுயிர்கட்கும் இயன்றவரை நன்மையே செய்தலாலும் அவைகளின் துன்பத்தைப் போக்குதலாலும் அன்பர்கள் கூட்டுறவு கிடைக்கும் என்பதை நன்குணர வேண்டும். (14) பேரின்பத்திற்குச் சாதனமான அறிவு அல்லது ஞானம் அடையவேண்டுமானால் சிவஞானபோதம் முதலிய பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும் முக்கியமாக தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலிய பன்னிரு திருமுறைகளையும் தினந்தோறும் இயன்ற அளவு ஐயம் திரிபு அறக் கற்க வேண்டும். (15) நாடோறும் இயன்றளவு உயிர்கட்கு நன்மையைச் செய்ய வேண்டும். (16) அருளுக்கு அடிப்படையான புலால் மறுத்தல் என்ற தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும். (17) தினந்தோறும் செய்யும் எல்லாக் காரியங்களையும் "எனக்காக நான் செய்கின்றேன்" என்ற எண்ணத்தோடுசெய்யாது, "கடவுள் திருவருளால் இவ்வாறு என்னைக் கருவியாகக் கொண்டு இவைகளைச் செய்விக்கிறது" என்று உண்மையாகவே எண்ணிச் செய்யும்படி பழக்கம் செய்து கொள்ளவேண்டும். (18) "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றபழமொழின்படி நமக்குக் கிடைக்கும் இன்பத்தைப் பிறருக்கும் பங்கிட்டுத் தரவேண்டும். (19) நாம் மட்டும் நன்னெறியில் ஒழுகுவதோடு நில்லாது பிறரையும் நன்னெறியில் ஒழுகும்படி செய்யவேண்டும். (20) "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற ஆன்றோர் வாக்கின்படி நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நடத்தவேண்டும். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

# தேசமே தெய்வம்

(எஸ். ஆர். இரகுநாதன் சின்னப்பம்பட்டி)

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி" தூணிலுந் துரும்பிலும், உளன் என்பதையாரும் மறுப்பதில்லை. "பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி" (நான் பார்க்கின்ற பூக்களிலெல்லாம் நீயே இருக்கின்றாய்) ஆகையால் "அம்மணி மலர் எடுக்க மனமும் நண்ணேன்" அந்தக் குளிர்ச்சி பொருந்திய மலரை எடுக்க என் மனம் விரும்பேன். எனப்பாடிய பாட்டை யாரும் மறுப்பதில்லை. யான் பிறந்து வளர்ந்த இந்நாட்டையும், அந்நாட்டின் கண் உள்ள மாக்களையும், மக்களையும், மற்றெல்லாச் சீவராசிகளையும், அது வேறு அவன் வேறு இது வேறு இவன் வேறு என்னாது, என்னாலியன்ற உதவியைச் செய்வேன் எனில் இதைக் கேட்போருங் காண்போருமாய்ச் சிலர், வானம் இடிந்து விழுந்து விடுவதேபோல், மனம் வாடி வதங்கி உறுமுகின்றனர். ஏனோ இவர்க்கு இந்தப் பயம். எந்தச் சாத்திரமும், எந்த மதமும் எந்தச் சாதியும், எந்த ராஜாங்கமும்,

ஒவ்வொருவனும், அறிவிலோ, பொருளிலோ, அல்லது துறையிலோ, தன்னைப் போல் பிறஉயிரையும் எண்ணித் தன்னாலான உதவியைச் செய்யவேண்டுவது கடமை என்பதை மறுக்க இயலுமோ. அல்லது இந்த உடல் மண்ணிலே தோன்றி மண்ணையே தின்று மண்ணிலே மறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போகின்றது என்பதை யாராவது மறுக்க இயலுமோ. இராமன், எந்த நிலத்தில் பிறந்தான், எங்குப் போய் ஒழிந்தான். தருமன் அர்ச்சுனன் பீமன் முதலிய அரசர்கள் எல்லாம் எந்நிலத்துப் பிறந்தனர், எங்குப் போய் மறைந்தனர். மகம்மதுநபி ஏசுநாதர் முதலியோர் எந்தப் பூமியில் பிறந்தனர். எங்குப் போயினர். இன்னம் நமது தாய் தந்தை முதல் அவர்க்கு முன் தோன்றிய மூதாதைகளும் எங்குத் தோன்றினர் எங்குச் சென்றனர். நாம் எந்த வழியில் வந்தோம். எல்லாம் இப்பாரத தேசத்தில் அல்லவா, நாம் எல்லாரும் இந்த பாரத தேசத்தின் வயிற்றில் பிறந்த சகோதர சகோதரிகள் அல்லவா. ஏழை யார், எளியன் யார், எஜமானன் யார், அடிமை யார், உயர்ந்தவன் யார், தாழ்ந்தவன் யார், பார்ப்பான் யார், பறையன் யார், எல்லாரும் ஒரு தாய் வயிற்றுப் பிறந்த மக்கள் அல்லவா ? இவ்வளவு உயிர்க் கூட்டங்களையும் பெற்றெடுத்து, "உண்ண உண்ணத் தெவிட்டாத அமிர்த பானத்திற் கொப்பான நீர் நிலைகளையும் உணவுப்பொருள்களிலும் நமக்கு ஊட்டுவிப்பவன் யார் ? நமது தாயாகிய தேசமல்லவா ? "சரயுவென்பது தாய் முலை யன்னது, உரவு நீர் நிலத்து ஓங்கு முயிர்க்கெலாம்" என்றார் கம்பர். உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் உணவுப் பொருளை உண்டாக்கிக் கொடுத்தும், தானே உண்ணுதற்குரிய இனிய நீரையூங் கொடுத்தலால் சரயூ என்னும் நதியின் தாயின் முலைக்குச் சமம் என்றனர். ஆஹா, என்ன அருமை, சற்றுக் கூர்ந்து கவனியுங்கள். பண்டைத் தமிழர் தமது நாட்டை எவ்வாறு எண்ணிப் போற்றினர் என்று. சரயுநதி தாய் முலையைப் போன்றது. சரயுநதி ஓடிவரும் பூமியே தாய், அதற்கு என்ன சந்தேகம். நாம் பெற்றெடுத்து வளர்த்து வரும் இந்தப் பூமி தாய் அல்லவோ, இது மட்டுமா, "நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ," என்றார் அயோத்திமா நகரைக் கம்பர் எனவே நமது தேசத்தைத் தாய் எனக் கொண்டாடும் வழக்கம்



நமக்கு இன்று வந்த பழக்கமன்று. நம்ரத்தத்திற் கலந்து ஊறிப் பிறந்தது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அன்றோ. அன்னை என்பது, நம்மைப் பெற்று வளர்க்கும் பாரததேசமாகிய தாய் பிதா, அத்தேயத்துள்ளும் பூறமுமாய்த்தங்கி யிருந்து நம்மை கூட்டிவைக்கும் தகப்பன், கடவுள், இவ்விருவரையும் மறக்க முடியுமோ ? இவ்விரண்டும் முன்னால் அறியவேண்டிய தெய்வம். எனவே தேசமுந்தெய்வமும் நாம் முன்னால் அறியவேண்டுவனவாம். தேசம் ஒரு தெய்வம், அதன்கண் ஒளிரும் பொருள் ஒரு தெய்வம் என்றே முதலில் நாம் அறியவேண்டும்.

" ஆயிரம் ஆண்டு இவ்வுலகை ஓம்பினேன், பிறிது ஒரு முறையில் என்பின் வைப்பதும் மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டு ". ஆயிரம் வருடகாலம் 'இவவுலகத்தை யாருக்கும் யாதொருகுறையும் இன்றிக் காத்து வந்தேன். எனக்குப்பின் அவ்வாறு உலகின்கண் உள்ள உயிர்கட்கு உற்றதுயரை நீக்கி உதவ ஒருவரும் இல்லையே என்றே தசரதர் கூறியதாய்க் கூறினர் கம்பர். பிள்ளையில்லாதவர்க்கு மோட்சமில்லை. நான் மோட்சமடையலும் என் பிதுர் தேவதைகள் எல்லாம் நன்மையடையவும் பிள்ளைவேண்டும் என்று குறையிருக்கவில்லை உலகத்திற்கு உதவிசெய்யவே மக்கள். உலகின்கண் உள்ள உயிர்கட்குவந்த துன்பத்தை நீக்கவே மக்கள். மக்களைப் பெறுவது உலகத்திற்குத் தொண்டுசெய்து கிடத்தற்கே. " என் கடன் பணி செய்து கிடப்பதே " யாருக்கு எவ்வாறு எப்போது என்ற கேள்விக்கு இடமில்லை. இது காலை நம் நாட்டில் தோன்றிக் கிடக்கும், பேதங்களுக்கும், மதங்களுக்கும், நமது முன்னோர் காரணமில்லை. நமது அறிவீனமே. ஏனெனில், நாம் நமது மனம் போன போக்கில் நேர்மையான வழியில் நடந்துசெல்வதை எதுவுந் தடுப்பதில்லை. ஒன்றினாலும் அதைத் தடுக்கவும் இயலாது. சொல்வதொன்று செய்வதொன்று என்ற மாறுபாடுகளுக்கு இடங்கொடுக்கலாகாது. எண்ணித்துணிக கருமம், பிறகு செயற்கரிய செய்யலாம்.

# கமலாபாய் கடிதங்கள்

(ஸ்ரீமதி பாப்பம்மாள் — கூடலூர்)

(முன் தொடர்ச்சி)

எனது அன்புமிக்க கமலா,

உனது கடிதம் கிடைத்தது. வாசிக்க அதிக மகிழ்ச்சி
யடைந்தேன். எனது பரீட்சைகளும் முடிந்தன. பி. ஏ. பட்ட
மும் பெற்றாய்விட்டது. இனி எனக்கு விலாசம் ஸ்ரீமதி ஸரஸ்
வதிபாய் பி. ஏ. என்று எழுதுவாய் அல்லவா? நானும்
ஸரோஜினியும் எம். ஏ. பரீட்சைக்கு வாசிக்கலா மென்றிருக்
கிறோம். ஆனால் ஸரோஜினி இன்னும் இரண்டொரு வாரத்தில்
பூனாவுக்கு என்னைவிட்டு போய்விடுவாள். அங்கு அவளுக்கு
கோகலே பெண்கள் உயர்தர பாடசாலையில் தலைமை உபாத்தி
யாயினி பதவி கிடைத்திருக்கிறது. அவள் என்னைவிட்டு நீங்கு
வது எனக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. என்செய்
வது, அவள் வயிற்றுப் பிழைப்பை அவள் கவனிக்க வேண்டியது
தானே. நான் அவளை மணம்செய்து கொள்ளும்படி எவ்
வளவோ சொல்லியும் அவள் ஒரே பிடியாக எனக்கு அனாவசிய
மான விலங்கு வேண்டா மென்கிறாள். அவளுடைய மாமனும்
பிரதி தினமும் பல கடிதங்கள் எழுதிய வண்ணமாக இருக்கின்
றான். அக்கடி தங்களை அவள் கையிலும் தொடமாட்டே னென்
கிறாள். அவளைப்பற்றிய விஸ்தாரம் அடுத்த கடிதத்தில் எழுது
கின்றேன்.

என் பிரசங்கத்தைப்பற்றி யேதோ எழுதியிருந்தனையே
அது என்னடி? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீ எழுதியது
உனது அபிப்பிராயமா அல்லது மங்களம் எழுதச் சொன்னாளா?
மங்களம் ஒரு உபாத்தியாயினி, அவளுக்கு என்னடி தெரியும்,
பொழுது விடிந்ததும் தலையை அழகாக பின்னிக்கொள்ளவும்,
அரக்கை ஜாக்கெட்டை அழகாக மாட்டிக்கொள்ளவுந்தான் அவ
ளுக்கு தெரியும். அவள் சரக்கு உனக்கு தெரியாதா? அவள்
எப்படித்தான் டிரெயினிங் பாஸ் செய்தாளோ எனக்கு தெரிய
வில்லை. ஒரு சமயம் அவள் பெண்பிள்ளை யாதலால் பிழைத்துப்
போகட்டுமென்று அதிகாரிகள் பாஸ் செய்வித்திருக்கலாம்.
அவள் சென்ற வாரம் எனக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில்



எழுதியது ஐந்துவரி அதில் பதினைந்து பிழைகளா, பலே பேஷ்
இவள் என்னடி பாடசாலையில் பிள்ளைகளுக்கு சொல்லித் தருவாள்.
இவளைப்போல் உபாத்தியாயினிகள் நமது நாட்டில் இருந்து
விட்டால் பெண்கல்வி அதிக சீக்கிரம் தான் விருத்தியாகிவிடும்.
ஒரு நாளாவது ஆற அமர உட்கார்ந்து யேதாகிலும் படிக்கின்றாளா,
எழுதுகின்றாளா, அல்லது யேதாகிலும் ஒரு பத்திரிகையை வாசிக்
கின்றாளா, ஒன்றும் கிடையாது. என்னை ஒரு புத்தகம் அனுப்
பிக்கும்படி கேட்டிருந்தாள். நான் பாலர் போதினி என்ற ஒரு
புத்தகத்தை அனுப்பித்து, இதை நன்றாக வாசி, பிள்ளைகளுக்கு
எளிய முறையில் போதிக்கும் விதிகளெல்லாம் இருக்கின்றன,
என்று அனுப்பினால் அவள் அதைத் தொடவேயில்லை. ஒருவாரம்
பொருத்து எனக்கு யேதாகிலும் நல்ல நாவல்கள் அனுப்பிக்க
வேண்டுமென்று எழுதுகின்றாள். நல்ல நாவல்கள் என்னவென்
பதுதான் எனக்கு புலப்படவில்லை. இவளை என்னடி சொல்லுவது.
இவளுக்கெதுக்கடி உபாத்தியாயினி தொழில். இவளிருக்கும் தொழி
லென்ன இவள் கேட்கும் புத்தகமென்ன. பலே பேஷ் இப்படி
யிருந்தால் ஆசிரியர்களுக்கு எங்கிருந்தடி தைரியம் வரும், விஷ
யங்கள் தெரியும், முன்னுக்கு வாமுடியும். கண்டதைப் படித்தால்
பண்டிதனாவான் என்று பெரியோர் சொல்லியிருக்கின்றார்களே.
பல பத்திரிகைகளையும், கல்வி சம்பந்தப்பட்ட பல புத்தகங்களையும்
வாசித்தால் தானே விஷயங்கள் தெரியும், அறிவு வாவா விருத்தி
யாகும். தீட்டத் தீட்டத்தானே கத்தி கூர்மையாகும். தீட்டின
கத்தியை இரண்டு வாரங்கள் கழித்து எடுத்துப்பார்? மழுங்கித்தான்
கிடக்கும். அறிவு கத்திக்குச் சமானமல்லவா? இவளைப்போல் ஆசிரி
யர்கள் நாவல் பைத்தியம் பிடித்திருந்தால் ஆசிரியர்கள் கதி
யென்ன? இவர்களைப்பற்றி நாமும் ஒரு நாவல் எழுதவேண்டியது
தான். இவளைப் போன்றவர்கள் கண்ட நாவல்களைப்படித்து
விட்டு, இஷ்டமான தடியனைக் கட்டிக்கொண்டு, கஷ்டமாக கடைத்
தெருவில் கையும் கப்பரையுமாக நிற்பதில் என்னடி சந்தேகம்?
நாகவேடு நாகமணியின்கதி யென்ன வாயிற்று பார்த்தனையா?
இவ்விதம் சில புண்ணியவதிகள் இருப்பதினால் தானே நமது
சில உபாத்தியாயினி சகோதரிகளை ஆணவம் பிடித்த
சில போர்டு அதிகாரிகள் ஆட்டிப்படைக்கின்றார்கள். இதில்

என்ன அதிசயம். நமது ஒளவைப்பிராட்டி "நீருயா நெல்லுயரும்" என்ற பாட்டின்படியும், தானடங்க, தன்குல மடங்கும் என்ற பழமொழிப்படியும் நாம் முதலில் நம்மை சீர்திருத்திக்கொண்டால் நம்மைக்கண்டு எல்லோரும் அஞ்சி நிற்பார்கள். நாம் சம்பளம் வாங்குவது சாப்பிடுவது, வீண்வம்பளப்பது, ஒன்று வாசிப்பது கிடையாது, ஒன்று யோசிப்பது கிடையாது, சொல்வதை கேட்பதும் கிடையாது, எங்கிருந்தடி ஆசிரியர்கள் சமூகம் சீர்திருத்தமடையும்.

அனாவசியமாக கல்வி யதிகாரிகளின்மீது குற்றமும் போர்டு மெம்பர்களின்மீது குற்றமும் சொல்லினால் எப்படியடி பொருந்தும். அவர்கள் பொருத்தமட்டில் அவர்கள் சம்பளங்கள் குறையாமலும், பேட்டாக்கள் குறையாமலும், செல்வாக்கு குறையாமலும் அவர்கள் ஒழுங்காகத்தான் தங்களை சீர்திருத்திக் கொள்ளுகின்றார்கள். சென்ற வருஷம் 100 க்கு ரூபாய் 5 பிடித்து விட்டார்களென்று அவர்கள் செய்த ஆர்பாட்டம், உடனே அவர்களுக்கு பிடித்தம் போய்விட்டது. வருடாவருடம் கிராண்டுத் தொகை குறைந்து கொண்டே வருகிறதே, ஒரு ஆசிரியர் சங்கமாவது ஓர் தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கும், கல்வி யதிகாரிகளுக்கும் அனுப்பி கிளர்ச்சி செய்கின்றதா? அழுதகுழந்தைக் கல்லவோ தாய் பால் கொடுப்பாள். கல்வியதிகாரிகளுக்கு பாடசாலைகள் ஒழிந்தாலென்ன, ஆசிரியர்கள் அழிந்தாலென்ன, அவர்களுக்கு என்னடி கவலை. அவர்களும் அவர்களது மனைவி மக்களும் சுகமாக இருந்தால் போதுமானது. அதுவே ஆசிரியர்கள் சுகமாக இருப்பதாக அபிப்பிராயம். மிஞ்சியாராவது ஐயா, கல்வி இலாகா பிரபுக்களாகிய நீங்கள் அரசாங்கத்திற்கு எங்கள் குறைகளை தெரிவித்து சற்று உபகாரம் செய்யக்கூடாதா என்று கேட்டால், டிப்டி இன்ஸ்பெக்டர் ஜில்லாக் கல்வியதிகாரியைக் காட்டுவார், ஜில்லாக் கல்வியதிகாரி டைரக்டரை கைகாட்டுவார். ஆனால் அதிகாரத்திலோ தீங்கிழைப்பதிலோ, குற்றங்கள் கண்டு பிடிப்பதிலோ, கல்வியதிகாரிகள் தேர்ந்தவர்கள். நிமிடத்திற்கு நிமிடம் தேளைப்போல் கொட்டுவார்கள். இல்லாத ரூல்கள், முடியாத சட்டங்கள், ஆகாத ஆக்டுகளை எடுத்துக் காட்டுவார்கள். இதைப்பற்றி மற்றொரு கடிதத்தில் விஸ்தாரமாக எழுதுகின்றேன். ஆசிரியர்களுக்கு நன்மை செய்வதென்பது பெரும்பாலும் அவர்கள் ஜாதகத்திலில்லை.

## மணித்திரட்டு

### யானைமுகமுள்ள குழந்தை

நீலகிரியிலுள்ள லவ்டேல் என்று இடத்திற்கு அருகேயுள்ள கோடா என்னும் கிராமத்தில் (20—8—34) ஒரு குழந்தை பிறந்ததாம். முகம் மாத்திரம் விநாயகர் முகம் போன்று காதுகள் அகன்றும், 2 அங்குலமுள்ள தும்பிக்கையும், இருபக்கங்களிலும் கோரைப் பற்களும் முளைத்திருக்கின்றனவாம். குழந்தை பிழைத்திருக்கிறது. தாய்பால் அருந்துவதில்லையாம், பசும்பாலில் இக் குழந்தை வளர்ந்து வருகிறது. குழந்தை பிறந்து 11 தினங்களில் 6 மாதத்திய குழந்தையைப்போல் காணப்படுகிறதாம்.

---

இவர்களையெல்லாம் யாரடி சீர்திருத்தமுடியும். ஆண்டவன் தான் சீர்திருத்தவேண்டும். அதில் சில புண்ணியர்கள், தேசபக்தர்கள், அறிஞர்கள், ஆசிரியர்களை நம்மைப் போன்ற சகோதரர்கள் என்று எண்ணங் கூடியவர்கள் வெகு சிலரே என்னுடைய சகோதரர் வீட்டிற்கு ஒரு டிப்டி இன்ஸ்பெக்டர் வருகிறார். ஆஹா என்ன தயாளமான மனப்பான்மை. என்ன அறிவு, என்ன ஆற்றல், என்ன சாமர்த்தியம். உபாத்தியாயர் என்றால் என்ன அன்பு அதைப்பற்றி எழுதவே முடியாது. சில சமயங்களில் அவருடன் நான்பேசப் புகுவேனேயானால் என்னை அடியோடு மறந்துவிடுவேன். இவர் கூடியசீக்கிரம், சென்னைக்கு வருவார் உன்னிடம் அவசியம் அனுப்பி வைக்கின்றேன். எல்லா டிப்டி இன்ஸ்பெக்டர்களையும் அவ்விதம் நாம் எதிர்பார்க்க முடியாது. எத்தனையோ சந்தர்ப்பங்கள். இம்மாதிரியாக பெரும்பாலும் டிப்டி இன்ஸ்பெக்டர்கள் இல்லாமையே ஆரம்பக்கல்வி நாளுக்கு நாள் க்ஷீணிப்பதற்கு ஒரு முக்கிய காரணம். இதையெல்லாம் சீர்திருத்துவதற்கு முதலில் நாம் சீர்திருத்திக் கொள்ளவேண்டும். பிறகு மற்றவர்களைச் சீர்திருத்தவேண்டும். அதை விட்டு பிறர்மீது குற்றம் சாற்றுவதில் பிரயோஜனமில்லை. நானும் அவருடன் ஒரு முறை சென்னைக்கு வரலாமென்றிருக்கின்றேன். அண்ணா எவ்விதம் உத்திரவு கொடுப்பரோ தெரியவில்லை. உனது குமாரன் ராமுவுக்கு எனது அன்பான முத்தத்தை தெரிவிக்கவும். நன்றாக வாசிக்கச் சொல்லவும்.

இப்படிக்கு,

உனது அன்புமிக்க ஸரஸ்வதி.

மத்திய அமெரிக்காவில் ஓர் தவளை பகலில் தன்நிறம் பச்சையாய் இருப்பதை இரவில் பழுப்பு நிறமாக மாற்றிக்கொள்ளுகிறதாம்.

*　　*　　*　　*

தென் அமெரிக்காவில் ஒரு பசைத் தேனீக்கள் விஷத்தையுடைய தேனைச் சேகரிக்கின்றனவாம்.

*　　*　　*　　*

பிடில்ஸ் பரோவில் 18 அவுன்ஸ் எடை உள்ள ஓர் குழந்தை பிறந்து உயிருடன் இருக்கிறதாம்.

*　　*　　*　　*

ரிச்சேர் ஜிலனி என்னும் 3 வயது பையன் தனது ஆகாரத்திற்கு வாழைப்பழத்தைத் தவிர மீதி எதையும் தின்பதே கிடையாதாம்.

*　　*　　*　　*

கடவுள் பெயரால் நடத்தப்படும் கொலை (பலி) சரீரத்தில் ஊசிகுத்திக் கொள்ளுதல் முதலியவற்றைத் தடுக்க எங்கும் தீவிர முயற்சி நடந்து வருகிறது.

*　　*　　*　　*

டில்லியில் 30 வயதுடைய ஒருவர் இரண்டரையடி உயரமும் பத்தொன்பது ராத்தல் எடையும் உள்ளவராயிருக்கிறாராம், இது ஒரு கலியுக விநோதம்.

*　　*　　*　　*

ஆறு குழந்தைகள் பெற்றபின் எம். ஏ. பட்டம்: —நியூஸிலந்தைச் சார்ந்த ஓகலந்து என்னும் இடத்திலுள்ள மிஸஸ் எதல் விஸரின் என்ற பெண்மணி, ஆறுபிள்ளைகளுக்குத் தாயானபின் காலேஜில் சேர்ந்து எம். ஏ. பட்டம் பெற்றாள். இவளுடைய மூத்த புத்திரனுக்கு வயது முப்பதாம்.

*　　*　　*　　*

ஒரு விபரீத வழக்கம்: —சாமா என்னுமிடத்தில் பெண்கள் ஆண்கள் பெயரையும், ஆண்கள் பெண்கள் பெயரையும் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

# உதய குமாரன்

## வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்

### ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

**வைரமணி:** இது ஏது? ஆச்சர்யமாய் இருக்கின்றது. நம் சங்கதியேதும் விளங்கவில்லை. சற்றே விவரமாய்ச் சொல்லவேண்டும். எமக்கும் உமக்கும் புத்திரனை சீவோதயன் சரித்திரத்தையாவது கேட்டு மரிப்போம்.

**மேகலை:** ஐயா செட்டியாரே! நான் வீரவர்மர் பத்தினி. என் பெயர் விசயை. என்னாயகர் காமக் கனலாலும், கவியின் கொடுமையாலும், வருத்தப்பட்டுப் பெருஞ் சண்டாளனை துஷ்டத்தும்மன் மதுரமொழிக்குக் கட்டுப்பட்டு நாடனைத்தையும் அவன்பால் ஒப்பிவித்துப் பின்னர் அவன் வாள்ப்பட்டு மடிந்தனர். நான் மயிர் பொறி இவர்ந்து அந்தப்புரம் நீங்கி ஆகாய மார்க்கம் செல்வுழி, விமானம் மயானமிறங்கிப் பத்துத் திங்கள் கருப்ப முற்றிருந்த நான் அவ்விடத்துக் கருவுயிர்த்து என் தோழி மொழி கேட்டு என் செல்வ மைந்தனை அவ்விடத்தே விட்டுச் சென்றேன். இது செய்தி ஐயா!

**பதுமுகன்:** என்ன, எல்லாம் சங்கடத்தின் மேல் சங்கடமாய் இருக்கின்றது. துன்பம் வருங்கால் யாவும் ஒருமிக்கவே வரும்போலும். இதுபற்றியோ.

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
　　அகத்தடியாள் மெய்நோவ வடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண் டோட
　　வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
　　தள்ளவொண்ணா விருந்துவரச் சர்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
　　குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே.

பசுவானது கன்றை யீனவும், மழை சொரியவும், வீடு இடிந்து விழவும், வீட்டு வேலைக்காரி உடம்பு நோவுவதென்றலும்

அடிமையாள் இறக்கவும், சொந்தக்காரன் ஈரம்போய் விடுகின்றதே யென்று விதைக்கும் பொருட்டு வித்தையை எடுத்துக் கொண்டு ஓடுதலும், வழியில் கடன்காரன் கொடுத்த கடனைக் கேட்டுத் தடுத்தலும், அவ்விடத்தில் ஒருவன் சாவோலை எடுத்து எதிரே வருதலும், நீக்கவியலா விருந்தாளி ஒருவன் வருதலும், அவனைப் பாம்பு கடிக்க, மன்னற்குரியவர் உழுதுண்டவர் கடமை கேட்டலும், சமயாச்சாரியார் தக்ஷணை கேட்க வந்ததுபோலல்லவோ இருக்கின்றது. அம்ம! யாவும் ஒருங்கு தேர்ந்து உலகப்பற்றை முற்றுந் துறந்த தங்களுக்கு நான் என்ன சொல்ல வியலும். என்னாலும் சீவோ தயனைப் பற்றிய பாத்யதை தங்களுக்கெய்திநம் சயிந்தையும் நமக்கு மருமகளாகின்றது. ஆதல்பற்றித் தாமே யாவர்க்கும் தேறுதல் சொல்லுவது தங்களது கடமையே. மேலும் நம் நாதரையும் புத்திரரையும் கொன்ற பாதகனைத் தொலைத்தற்கான விதம் முயலுதல் இனி வேண்டும். இனி நாம் சயிந்தையின் தந்தையாரான ஜெயகேசரிவர்மன்பாற் சென்று நிகழ்ந்தன உரைத்து துஷ்டத்தம்பனைத் தொலைத்தல் வேண்டும்.

மேகலை: அப்பா! பதுமுகா நீ கூறுவது யாவும் மிகவும் நன்மையாகவே யிருக்கின்றது. என் புத்திரன் சென்ற பின்பு அப்பாதகனைக் கொன்றாலாவதென்ன. அப்படி அவனைக்கொன்ற போதும் யார் அரசாள்வது. அவனே அவனை அழித்தல் வேண்டும். பதியையும், நிதியையும், புத்திரனையு மிழந்து இன்னும் உயிர் வாழ்வனோ இதோ அனலெழுப்பித் தீபுகுவேன்.

சயிந்தை: நானும் என் மாமியுடன் தீப்புகுவேன்.

வைரமணி: நானும் தீப்புகுவேன்.

சிந்தாமணி: நானும் என் நாதருடன் தணல்புகுவேன்.

பதுமுகன்: நானும் என் நண்பனைக் காணவருகின்றேன்.

மேகலை: என் சுதனுக்கு வாய்ந்த செல்வமே. நீ அனல்புகுவது தகதன்று. நின் தந்தையாகிய வென் அண்ணனுக்கு நீ ஏக புத்திரியானதால் அவன் யிறந்தாயென்பதையவன் அறிந்ததால் அவன் உயிர் தரியான். நீ நின் தந்தையிடம் சென்று நிகழ்ந்ததைத் தெரிவித்து நின் கவலையை யொழித்து வாழ்வாய்.



சயிந்தை: மாமி! பதியை இழந்த பாதகியாகிய நான் எப்படி உயிர் வாழ்வேன். என்றும் என் நாதரைப் பிரிந்தறியாத யான் என் காலமெல்லாம் எப்படிப் பிரிந்திருப்பேன். உலகம் என்னை முதல்வனிழந்த முண்டையென்றேசாதோ. இவ்வசை மொழியை எவ்விதம் ஆற்றுவேன். என் நாயகரினும் தாய் தந்தையர் சிறந்தாரோ. ஏது எப்படி நடக்கினும் நான் இக்கணமே என் நாயகருடன் செல்லல் வேண்டும். தயை செய்து என்னைத் தடுக்கவேண்டாம்.

மேகலை: ஐயா! செட்டியாரே! தாமும் தங்கள் பனைவியாரும் என் மகன் பொருட்டு ஏன் வீணில் உயிர்துறக்கவேண்டும்?

வைரமணி: அம்ம! எல்லாமறிந்த தங்களுக்கு நான் சொல்வதென்னவுளது. பெற்ற கடமை தங்களதும் இதுவரைக்கும் பொன்னேபோல் போற்றி வளர்த்துவந்த கடமை எங்களுடையதுமானதால் நும் அன்பினும் எம் அன்பே மிகும். எம்முயிர்க்கு உயிராயிருந்த மைந்தனிறந்தும் நாங்கள் இனி உயிர் வாழ்வதில்லை. இதோ அவனுடன் செல்லுகின்றோம்.

மேகலை: அப்பா! பதுமுகா! நீயேன் வீணில் அனல்பாய்தல் வேண்டும். துஷ்டத்தும்பனுக்கு நீ ஏக மருமகனானதால் அவனுக்குப் பின்னர் நீயே பட்டத்திற்கு வரப்போகின்றாய். நின் நேசனாண்டாலென்ன. நீ யாண்டாலென்ன? எல்லாம் ஒன்றே.

பதுமுகன்: என் நண்பன் இறந்தும் நானிருப்பதா. அவனுக்கு உரிமையாகி ஆளவேண்டிய அரசையான் ஆள்வதா. என் நண்பன் வழித்துணைக்கு நானே முன் செல்லுகின்றேன்.

மேகலை: என்ன என் புத்திரனை விண்ணுலகிற்கான இத்தனை உயிர்கள் போக விருக்கின்றது, நல்லது அனல் புகுவோம்.

பதுமுகன்: (திரும்பிப் பார்த்து) சீவோதயனைப் பிணித்துச் சென்ற கொலையாளிகளில் ஒருவன் இப்புறமாய் வந்துகொண்டிருக்கின்றான். அவனை விசாரித்தால் எல்லா சங்கதிகளும் விவரமாய்த் தெரியும். பார்ப்போம். சற்று நிதானியுங்கள்.

மேகலை: அதுவே நல்லது. செய்தி விளைவோம்.

சயிந்தை : அப்பாதகனை விசாரிப்பதில் என்னபயன். அவனைப் பார்க்கும்போதே எனக்குப் பயமாய் இருக்கின்றது. கண்ணை மூடிக்கொள்ளுதல்-

வீரன் : (பிரவேசம்) சாமி! ஏது இத்தனை தூரம் வந்தது. உங்க ஜோலி எங்கே.

பதுமுகன் : என்னடா என்னிடத்தில் விளையாடுகின்றாய்.

வீரன் : இல்லே சாமி. நீங்கோ தாவள்ளாட்ரிங்கோ. உங்கோ ஐயாவே ஒளிச்சிவச்சிகினு.

சயிந்தை : (கண்களிலிருந்து கையை எடுத்துவிட்டுப் பார்த்தல்)

பதுமுகன் ; சரி. நீங்கள் என் நண்பனை அழைத்துச் சென்று என்ன செய்தீர்கள்.

வீரன் : உங்கோ ஐயாவே எங்கே ஒளிச்சிவச்சிக்கினு இருக்கி ரீங்கோ சொன்னாதா.

மேகலை : உள்ளே இருக்கின்றார் சொல்.

| | | |
|---|---|---|
| சந்துசந்து | சந்தெகடே | |
| மெந்தெகள்ளு | மொண்டுமொண்டு | |
| கந்தையா | யெங்களுக்கு | |
| தந்திருந்து | ஆத்துங்கோ | (1) |
| தென்னங்கள் | தித்திப்பு | |
| சொன்னையா | சோக்காக | |
| பன்னிபன்னி | பாடாதே | |
| முன்னேவந்து | ஆத்துங்கோ | (2) |
| பனங்கள்ளு | பலசோக்கு | |
| மனமெல்லா | மவுந்தூடு | |
| உனக்குசாமி | வொதவியுண்டு | |
| எனக்கொண்ணு | யேத்துங்கோ | (3) |

வீரன் : இப்போ எனக்கு ஒன்றே போட்ட சொல்ரேன்.

பதுமுகன் : முன் சொல் பிறகு நான்காய்ப் போடுகின்றேன்.

வீரன் : காங்காய் இண்ணு மாங்காயா ? அது இன்னைத்தக்கு புளிப்பு.

(தொடரும்)

# ஆரம்ப பாடசாலைகளில் போட்டா போட்டி

G. O. No. 580 L. E. (12-4-27)

நமது நாடு பல துறைகளிலும் முன்னேற்ற மடையாததற்கு முக்கிய காரணம் ஒருவருக்கொருவர் போட்டா போட்டி போடுவதே. நமது நாட்டில் ஒருவன் ஒரு தொழிலை நூதனமாக ஆரம்பிப்பானாகில் அத்தொழில் தலையெடுப்பதற்குள் பலர் போட்டியுடன் அத்தொழிலை ஆரம்பித்து தாங்களும் விருத்தியடையாமல், ஆரம்பித்தவனையும் தலையெடுக்க வொட்டாமல், அத்தொழிலை அடியோடு மறையும்படி செய்கின்றனர். உதாரணமாக நாம் எழுதும் மை (Ink) கைத்தொழிலை எடுத்துக் கொள்ளுவோம். சில ஆண்டுகட்கு முன்பு முதலில் இத்தொழில் நமது நாட்டில் தோன்றிய போது அத்தொழிலை ஆரம்பித்தவர்களும் சில பணம் சம்பாதித்தது மாத்திரமன்றி, மேல் நாட்டு மைக்கு ஏறக்குறையச் சரிசமானமான நல்ல மையை தயாரித்து வந்தனர். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அநேகர் இத்தொழிலிற்கு போட்டிப் போட்டு அதன் விலையையும் குறைத்து நல்ல மையையும் தயாரிக்க முடியாத நிலையில் வந்துவிட்டார்கள். இம்மாதிரியாக நமது நாட்டில் போட்டிப் போடும் வியாதி நமது மக்களிடத்தில் தீவிரமாக பரவிவருகின்றது. இன்னொரு உதாரணம் சில ஆண்டுகளுக்கு முன்பு வெகு சிலரே புத்தகங்களை யெழுதி பிரசுரம் செய்து ஜீவித்து வந்தனர். அக் காலத்தில் புத்தகங்களும் நன்றாக இருந்தன, கல்வியும் நன்றாக இருந்தது. கல்வியும் நன்றாக பரவிவந்தது. புத்தகங்களை யெழுதுவோர்க்கும் தகுந்த ஊதியம் கிடைத்துவந்தது. இப்பொழுதோ புத்தகங்களை எண்ணினாலும் எண்ணலாம், புத்தக பிரசுரகர்த்தர்களை எண்ண முடியாது. அச்சு அடுக்குபவன் முதல் பிரசுரகர்த்தர்கள் தான். காகிதம், அச்சு அடிக்கும் கூலி, சில பெரிய மனிதர்களுக்கு சன்மானம் இவைகள் சேர்ந்தது ஒரு புத்தகத்தின் விலை. அப் புத்தகத்தில் என்ன இருக்கின்றதோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். போகட்டும் இதுதான் வியாபாரம். ஒரு பாடசாலை ஏற்கனவே நன்றாக நடந்துகொண்டிருக்கையில் அதற்கு போட்டியாக மற்றொரு பாடசாலையை ஏன் ஏற்படுத்த வேண்டும்? ஆரம்ப பாடசாலைகள் உப்பு மிளகாய் வியாபாரக் கடைகளா, அல்லது இதில்

யாருக்காவது யேதாகிலும் கமிஷன் கிடைக்கின்றதா? நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. இருக்கட்டும் யேதோ சிலர் வேலையில்லா திண்டாட்டத்தினால் பாடசாலைகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள் அதைப்பற்றி கல்வி யதிகாரிகள் கூடுமானவரையில் கவனித்து தடுத்து வருகின்றார்கள். ஜில்லா போர்டார்களும் முனிசிபல் அங்கத்தினர்களும் ஏற்கனவே நன்றாக நடைபெற்றுவரும் ஒரு எய்டட் பாடசாலைக்கு விரோதமாக ஏன் ஒரு பாடசாலையை ஏற்படுத்த வேண்டும்? தங்கள் எடுகேஷன் பண்டில் ஒரு சமயம் அதிக பணம் இருக்கின்றதா? அப்படி செய்வதனால் ஆரம்பக்கல்வி அதிகம் பரவுமென்பது இவர்களது அபிப்பிராயமா? இதனால் இவர்களுக்கு யேதாவது ஓட்டுச் செல்வாக்கு அதிகமாய் விடுமா? உதாரணமாக சேலம் செவ்வாய்ப் பேட்டையில் என். கோபாலய்யா என்பவர். சுமார் 6000 ரூபாய்கள் சிலவு செய்து பாடசாலைக்கென ஒரு கட்டிடம் கட்டுவித்து சுமார் 50 வருடங்களாக செவ்வனே நடத்தி வருகின்றார். திடீரென சேலம் முனிசிபாலிடியார் அப் பாடசாலைக் கருகே ஒரு முனிசிபல் பாடசாலையை வைக்க ஏற்பாடு செய்கின்றனராம். இவ்விதம் எதற்காக செய்ய வேண்டாம். இவ்விதம் செய்வது தவறு என்பதாக கவர்ன்மெண்டார் C. O. NO. 580 L. E. (12-4-27) ஒரு பாடசாலைக்கு போட்டியாக மற்றொரு பாடசாலை வைக்கக் கூடாதென்பதாக ஓர் உத்திரவை பிரப்பித்திருக்கின்றார்கள். பாடசாலைகள் இல்லாத இடத்தில் வைப்பதைவிட்டு குண்டு சட்டியில் இவாகள் குதிரையை ஓட்டுவானேன். இவ்விதம் போட்டிப் போடும் பொறாமைக் குணம் நம்மவர்களிடத்திலிருந்து நீங்கும்வரை நமது நாடு ஒரு காலமும் விருத்தியடையாது. இன்னும் நாம் சிலகாலம் அடிமைகளாக இருக்க வேண்டியதுதான். எத்தனை காந்திமகான்கள் பிறந்துதான் பயனென்ன? எத்தனை நேஹ்ருகளும், குப்தாக்களும், தியாகம் செய்துதான் பிரயோஜனமென்ன? ஒருவன் நன்றாக வாழ்ந்து பார்க்க நம் மனம் இடம் கொடுப்பதில்லை. ஒற்றுமை எங்கிருந்து வரும். உடனே இது விஷயத்தை கல்வியதிகாரிகளும் அரசாங்கத்தாரும் இம்மாதிரி பாடசாலைகள் ஒன்றுக் கொன்று போட்டா போட்டிகள் போடா வண்ணம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுவதுடன், தங்கள் டிப்டி இன்ஸ்பெக்டார்களுக்கும்



இது விஷயமாக பலமான உத்திரவுகளை பிரப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். முக்கியமாக முனிசிபாலிடிகள் இருக்குமிடங்களில் இவ்விதமான உபத்திரவங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஏற்கனவே ஆரம்பக்கல்வி ஒரு அடி பாதாளத்தில் இருக்கின்றது. ஆயிரக் கணக்கான கிராமங்கள் பாடசாலைகளே இல்லாமல் தவிக்கின்றன. அந்த இடத்தில் பாடசாலைகளை வைத்து பரிபாலிக்க எவருக்கும் யோசனை தோன்றுவதில்லை. இதுவிஷயத்தில் அரசாங்கத்தார் ஜி. ஓ. நெம்பர் 580 எல். இ. (12-4-27) பிரப்பித்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

இன்னும் நமது சந்தா நேயர்களில் அநேகர் 1934-1935 இரண்டாவது வருட சந்தாத்தொகையை அனுப்பிவைக்காமல் இருக்கின்றனர். தயவுசெய்து சீக்கிரம் மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். வி. பி. இல் பத்திரிகையை அனுப்புவதென்றால் இருபாலருக்கும் பலவகையான நஷ்டங்கள் ஏற்படுகின்றன. மணிஆர்டர் அனுப்பும்பொழுது புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா வென்பதை அவசியம் குறித்தெழுதவும்.

சில அசந்தர்ப்பங்களால் நமது பத்திரிகை இரண்டு மாதத்திற்கு சேர்த்து அனுப்பப்பட்டிருக்கிறது. இனி ஆகஸ்ட்டு 5 வது மலரிலிருந்து மாதா மாதாம் அனுப்பிக்க பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தாங்கள் மாத்திரம் பழைய சந்தாவை அனுப்புவதோடு நின்றுவிடாமல், தாங்கள் காணும் ஒவ்வொரு ஆரம்பாசிரிய சகோதரர்களையும் சந்தாதாரராக சேர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எவ்வளவு சந்தாதாரர்கள் அதிகம் சேருகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு பத்திரிகையை பலவகையிலும் விருத்தி செய்வதல்லாமல் குறித்த தேதியில் தவறாமல் அனுப்பிக்க இயலும். ஒவ்வொரு ஆசிரியரும் ஊக்கம் எடுத்துக் கொள்வார்களாக.

மானேஜர்,

# ஆசிரிய மானேஜர்களே என்ன செய்கின்றீர்கள்?

தற்போது நமது இராஜதானியிலுள்ள ஏறக்குறைய 50000 ஆரம்பப்பாடசாலைகளில் சுமார் 20000 ஆரம்ப பாடசாலைகள் ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள நூற்றுக் கணக்கான ஆசிரியர் சங்கங்கள் மாதா மாதம் குறித்த தேதியில் நடந்து வருகின்றன. ஒரு சமயம் மாதம் தவறினாலும் தவறும் இந்த ஆரம்பாசிரியர்கள் கூட்டம் மாத்திரம் ஒரு பொழுதும் தவறுவதில்லை. இது நமக்கு ஒரு பெரிய சந்தோஷமே. டிப்டி இன்ஸ்பெக்டர்கள் இக் கூட்டங்களை எந்த வகையிலாகிலும் தவறாமல் நடத்துவதைப் பற்றி நாம் அவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்த கடமைப்பட்டுள்ளோம். இக்கூட்டங்களினால் ஆசிரியர்களுக்கு நன்மை இருக்கின்றதோ, இல்லையோ அதைப்பற்றி நமக்கு தற்போது விவாதம் வேண்டாம். கூட்டங்கள் நடக்கின்றன. ஆனால் தற்போது கூட்டங்கள் நடைபெறும் வகை ஆசிரியர்களுக்கு எவ்வகையிலும் பயன்படவில்லையென்பது மாத்திரம் உண்மை.

அதற்கு பல காரணங்களும் உண்டு. ஒன்று ஆசிரியர்கள் ஏதாவது போர்டு சம்பந்தப்பட்ட விஷயத்தைப்பற்றி குறைகூறினால் போர்டு அதிகாரிகள் வேலையைவிட்டு நீக்கி விட்டால் என்ன செய்வதென்ற பயம். இரண்டாவது கல்வியதிகாரிகளைப்பற்றி யேதாகிலும் குறை கூறினால் ரிப்போர்டுகள் எழுதி போர்டு அதிகாரிகளைக் கொண்டு வேலையை விட்டு எங்கு நீக்கிவிடுகிறார்களோ என்றபயம். இவ்விதமாக ஆசிரியர்களுக்கு கைக்கு விலங்கும் வாய்க்குப்பூட்டும் போடப்பட்டிருக்கின்றன.

எவ்வித விலங்குகளுமில்லாத ஆசிரிய மானேஜர்கள் ' என்ன செய்கின்றார்கள் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. அரசாங்கத்தார் இவர்களுக்கென தனிச் சங்கங்கள் ஏற்படுத்தி ஜில்லாக் கல்வி சபைகளில் கல்வியதிகாரிகளுக்கு சமமாகஉட்கார்ந்து, தமது குறைபாடுகளை நீக்கிக்கொள்ளவும், கல்விச் சம்பந்தப்பட்ட விஷயங்களை விவாதிக்கவும் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறார்களே.

இவர்களே ஏன் விலங்குகளைத் தேடிக்கொள்ள வேண்டும். இவர்கள் ஒன்று சேர்ந்து இவர்கள் ரேஞ்சு சங்கங்களை ஆங்காங்கு



ஒன்று கூட்டி சரிவர நடத்துவார்களேயானால், இவர்களும் முன்னேற்ற மடைவதல்லாமல், பலவித விலங்குகளில் அகப்பட்டுத் தவிக்கும் ஏனைய ஆசிரிய சகோதர்களுக்கு எவ்வளவோ நன்மையை இவர்கள் செய்யலாமே. ஒரு குடும்பத்தில் பிறந்த நான்கு பிள்ளைகளில் ஒரு பிள்ளை உலகப் பிரக்யாதி யடைந்தாலும் போதுமானது. அதனால் அக் குடும்பமே பிரகாசிப்பது உலக இயற்கையல்லவா ? ஆசிரியர்கள் கதிதான் அதோகெதியென்றால் ஆசிரிய மானேஜர்களேன் ஆசிரியர் சங்கங்களோடு சேர்ந்து இவர்களுடைய செல்வாக்கை குறைத்துக்கொள்ளவேண்டும்.

தற்போது நமது இராஜதானியில் வெகு சில ஆசிரிய மானேஜர்கள் சங்கமே தீவிரமாக உழைத்து வருகின்றன. தற்காலத்தில் ஆரம்பக் கல்வி யுலகத்தில் பலவகையிலும், போர் முனையில் நின்று சில சமயங்களில் அரசாங்கத்தார் செய்துவிடும், தவறுதல்களை தைர்யமாக எடுத்துக்கூறியும், கிராண்டுகள் போராதென்று அடிக்கடி கூக்கறலிட்டும், ஆரம்பாசிரியர்களுக்கு ஏற்படும் பற்பல இடையூறுகளை ஒருவாறு தடுத்தும், ஒருவர் தயவுக்கோ, தாட்க்ஷண்யத்திற்கோ அஞ்சாமல் வேலை செய்துவருவது ஆசிரிய மானேஜர்கள் சங்கமே. சில மாதங்களுக்கு முன்பு 50000 அன்டிரெயின்ட் உபாத்தியாயர்களுக்கு கிராண்டு கொடுக்கக்கூடாதென்று அரசாங்கத்தார் பிரசுரித்த அறிக்கையை தடுத்து அவ்வறிக்கையை அமுலுக்கு கொண்டுவாராமல் தடுத்தது யார்? ஆசிரிய மானேஜர்கள் சங்கங்களே. தற்போது தூங்கிக் கொண்டிருக்கும் கன்ஸாலிடேஷன் கான்ஸன்டிரேஷன் ஸ்கீமுக்கு எதிர்த்து நின்று, அதை எய்டட்பாடசாலைகள் பொருத்த மட்டில் கிட்டேயும் வாராமல் தடுத்துக்கொண்டிருப்பது யார்? ஆசிரிய மானேஜர்கள் சங்கமே? சில ஆசிரிய மானேஜர்கள் ஆடு எவ்விதம் கசாப்புக்காரனை நம்புகின்றதோ சில அறிவிலிகள், டிப்டி இன்ஸ்பெக்டர்கள் தயவுக்கும், தாக்ஷண்யத்திற்கும், பாத்திரர்களாய் சில ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்கள் தயவிருந்தால் போதுமென்றும், தங்கள் ஆசிரிய மானேஜர்கள் சங்கங்களைப் புறக்கணித்து வருகின்றனர். இவ்விதம் இவர்கள் எத்தனை நாட்கள் காலங்கழிக்க இயலும். இரண்டொரு டிப்டி இன்ஸ்பெக்டருக்கு இவர் நல்லவராக இருக்கலாம், பல நன்மைகளைப் பெறலாம். எல்லா டிப்டி இன்ஸ்பெக்டர்களையும் அவ்வாறு அவர் எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

இதனால் டிப்டி இன்ஸ்பெக்டர்களுடனும், கல்வியதிகாரிகளிடமும், கல்விச்சபை அங்கத்தினர்களிடத்திலும் ஆசிரிய மானேஜர்கள் வீண் வம்புகள் வளர்த்துக்கொண்டு, குஸ்தி பிடிக்க வேண்டுமென்பது எமது அபிப்பிராயமன்று. அவரவர்கள் பாடசாலைகளை அவரவர்கள் ஒழுங்காக நடத்தவேண்டியது முதற் கடமை. பிறகு ஆசிரியர் மானேஜர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து ஓர் சங்கம் கூட்டி அதன் மூலம் நமது குறைகளை கல்வியதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டியது இரண்டாவது கடமை.

கல்வியதிகாரிகள் செவிகொடுக்காவிடின் டைரக்டரிடம் தெரிவிக்கவேண்டியது. அவர் அதைக் கேட்காவிடின் கனம் மந்திரியவர்களை அணுகி விஷயங்களை அறிவிக்கவேண்டியது. அவர் ஒரு சமயம் மயக்கம் கொள்ளுவாரானால், நம்முடைய ஓட்டைக்கொண்டு பொதுஜனசேவை செய்கிறோமென்று சட்டசபைச் செல்லும், அந்தந்த ஜில்லா எம். எல். ஸி. அங்கத்தினர்களிடமும் விஷயங்களை அச்சடித்துக் கொடுத்து கனம் மந்திரியாரவர்களைக் கண்டு பேசி காரியங்களை சாதித்துக்கொள்ளவேண்டியது. இவ்வளவு சௌக்கிரியங்கள் அரசாங்கத்தாரும் கல்வி யதிகாரிகளும் நமக்கு அளித்திருக்கையில் ஏன் இந்த ஆசிரியமானேஜர்கள் மயங்கிக்கிடக்கின்றனர்களோ தெரியவில்லை. உதாரணமாக மிஷன் பாடசாலைகளையும், அவைகளின் மானேஜர்கள் நடந்து கொள்வதைச் சற்று கவனியுங்கள். சென்ற வருடம் நெல்லூரில் ஜில்லாக் கல்வி யதிகாரி யொருவர் ஒரு பாடசாலைக்கு அங்கீகாரம் கொடுக்கவே மாட்டேனென்று தடுத்து எழுதிவிட்டார், டைரெக்டர் துரையவர்களும் அதை ஆமோதித்து எழுதிவிட்டார். கடைசியில் அந்த மிஷன் மானேஜ்மெண்டார் மூன்றும் பேருக்குத் தெரியாமல் கவர்ன்மெண்டிற்குச் சென்று கனம் கல்விமந்திரியவர்களிடத்திலிருந்து ஒரு G. O. வை பிறப்பித்து ஆங்கீகாரம் பெற்றுவிட்டார். இதற்குக் காரணம் என்ன? மிஷன் மானேஜ்மண்டிலுள்ள ஒற்றுமை. பல கிளைச் சங்கங்களைச் சேர்த்து சென்னையில் (Cathaolic Missionary Educational Council) என்பதாக அவர்கள் ஒரு மாகாணச் சங்கத்தை ஏற்படுத்தி ஒற்றுமையுடன் வேலை செய்து வருவதே அதற்கு முக்கிய காரணம். இதே நெல்லூரில் இன்னொரு மிஷன் பாடசாலை மானேஜர் போர்டிங் கிராண்டை கல்விச் சபைத்



தலைவர் பலதரம் கேட்டுக்கொண்டும் கொடாமையால், டைரக்டர் துரையவர்களை தங்கள் சங்கத்தின் காரியதரிசியின் உதவியைக் கொண்டு நேராகப் பார்த்து, உடனே அந்த கிராண்டை இரண்டு வருடங்களுக்குப் சேர்த்து கொடுத்துவிடப்பட்டது. இவைகளெல்லாம் எதனால் நடக்கின்றது, சங்கத்தின் வலுவினால் அல்லவா? இம்மாதிரி எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. சங்கங்களினால் ஆகாதது ஒன்றுமில்லை. தற்போது நாட்டில் ஒரு கிளர்ச்சியை மக்களுக்கு ஊட்டிவரும் காங்கிரஸ் என்பது என்ன? அதுவும் பல மக்கள் சேர்ந்த ஓர் சுயேச்சை சங்கமேயொழிய வேறன்று.

ஆதலின் உடனே ஆசிரிய மானேஜர் சகோதரர்கள் தங்கள் தூக்கத்திலிருந்து சற்று கண் விழித்து, அந்தந்த ரேஞ்சில் தனிப்படையாக ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் ஏற்படுத்தி, அதன் காரியஸ்தர்களை தேர்தல் செய்து, கீழ்க்கண்ட சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் சங்க ஆபீசுக்கு அந்தந்த சங்க நடவடிக்கைகளை அனுப்புவார்களாக. இன்னும் வேண்டிய விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும். (மாகாணக் காரியதரிசி)

**சென்னை மகாண ஆசிரிய மானேஜர்கள் சங்கம்,**
**ஆரம்பக்கல்வி ஆபீஸ்,**
**94-95, புதுத்தெரு, மண்ணடி மதராஸ்.**

## கிழக்கு கோதாவரி ஜில்லாபோர்டு ஆரம்பாசிரியர்களின் சம்பளம்

(6—9—34)

சம்பள விஷயமாக ஏற்படுத்தப்பட்ட கமிட்டியொன்று கீழ்க்கண்ட விதமாக ஆசிரியர்களின் சம்பளங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 65 | ஸெகண்டரி கிரேட் டிரெயின்ட் | உபாத்தியாயர்கள் | ரூ. 25 - 1 - 45 |
| 300 | ஹையர் கிரேட் ,, | ,, | ரூ. 20 - 1 - 30 |
| 2400 | லோயர் கிரேட் ,, | ,, | ரூ. 15 - 1 - 20 |

# சங்கக் குறிப்புகள்

## ஆரம்பாசிரியர் சங்கம் தென்காசி

4—8—34ல் ஒரு சாதாரணக் கூட்டம் கூடிற்று. அது காலை உயர்திரு பி. சுப்பராயபிள்ளையவர்கள் பி. எ. எல். டி. சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் தலைமை வகித்தனர். ஸ்ரீமான் டி. சேஷையா அவர்களும் ஸ்ரீமான் சங்கரலிங்க உபாத்தியாயர் அவர்களும் "அறம்" என்ற விஷயத்தைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினர்கள். ஸ்ரீமான் சிவராமய்யர் அவர்கள் திசைகளைப் பற்றி 2-வது வகுப்பிற்கு மாதிரிப்பாடம் நடத்தினர்

## தேத்தாகுடி வடக்குச்சேத்தி உபாத்திமைச் சங்கம்

ஷை சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 28–7–34ல் செம்போடை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ கே. இரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அக்கிராசனத்தில் கூடியது.

மாடல்லெஸன் தாவரங்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளும் விதம் என்பதைப் பற்றிய வியாசமும் சொல்லப்பட்டது. அக்கிராசனாதிபதியவர்கள் மாடல்லெஸன் வியாசம்சம்பந்தமாய் அனேக விஷயங்களை எடுத்துரைத்தார்.

## பெரியகுளம் ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் சங்கம் மதுரை ஜில்லா

இச்சங்கத்தின் கூட்டம் 8—7—34 தேனி நாடார் ஸ்கூலில் ஸ்ரீமான் எ. நாராயணசாமி அய்யர் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்று பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. 1934–35 வருஷத்திற்கு விடுமுறை நாட்களின் ஜாப்தாவும், லேயார் அண்டிரெயிண்ட் டீச்சர்களின் சர்வீஸ் ஆரம்பமான தேதியுள்ள ஜாப்தாவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

2. பெரியகுளம் ரேஞ்சு ஸ்பீல்மிமோரியல் விளையாட்டுக்கு ரூ 5 நன்கொடையளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.



3. இவ்வருஷம் கிராண்டு வாங்கப்போகும் சமயத்தில் எவ்வித முன்னறிக்கையும், சாவகாசமும் கொடாமல் பல ஆரம்பப்பாடசாலைகளின் அங்கீகாரமும், திரவிய சகாயமும் கொடாதபடி, ரிப்போர்டுகள் செய்து, இந்த ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் கெடுத்த பாடசாலைகள் விஷயமாய், மதுரை ஜில்லா எடுகேஷனல் கவுன்சில் பிரஸிடெண்டு, கல்வியிலாகா டைரெக்டர் முதலியவர்களை தூது சென்று பார்த்து, உழைத்த காசையாவது கொடுக்கும்படி கேட்க, காரியதரிசி, பிரஸிடெண்டு, சௌண்டையா, நாராயணசாமி அய்யர், ஜெயராஜ் சொக்கலிங்கக்குருக்கள் இவர்களை கமிட்டியாக ஏற்படுத்தப்பட்டது.

4. 15–7–34ல் ஷை கமிட்டி பெரியகுளம் யு. ஜி- ஸ்கூலில் கூடி மிமோரியல் தயாரித்து வேண்டியதை நடத்த இச்சங்கம் கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்து விஷயங்களை பத்திரிகைகளுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

5. ஒரே கிராமத்தில் ஏற்கெனவே அங்கீகாரமான உயர்தர வகுப்புப் பாடசாலைகள் பலயிருக்க, புதிதாய் உயர்ந்த வகுப்புகளை அங்கீகரித்து, முன்னமே அங்கீகாரமான பாடசாலைக்கு இடஞ்சல் உண்டு பண்ணுவது கூடாதென்ற விஷயமும், சேடபட்டி ஆசிரிய மானேஜர் விண்ணப்பமும் வாசித்து, கன்சாலிடேஷன் முறைப்படி ஷை கிராமத்தில் மூன்று ஐந்தாவது வகுப்புப் பாடசாலைகளிலிருக்க புதிதாய் ஒன்று அங்கீகாரம் மார்க்கண்டேயஸ் கூலுக்குக் கொடுப்பது நியாயமல்ல என்ற விஷயத்தைக் கல்வி அதிகாரிகளுக்கு இச்சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.

6. இந்த ரேஞ்சில் உள்ள ஆசிரியர்களையும், ஆசிரிய மானேஜர்களையும், இந்த ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ டி. வி. வெங்கிட்டராமய்யர் அவர்கள் பி. எ. எல். டி. மரியாதைக் குறைவான வார்த்தைகளால் தூஷித்துப் பேசி வருவதாயும், வீரபாண்டிச் சங்கத்தில் 9-6-34ல் "போக்கடாப் பயல்கள்" என்று பேசியதாயும், போடேந்திரபுரம் ஆசிரியமானேஜர் எ. நாராயணசாமி அய்யர் கொடுத்த லெட்டரின் பேரில், இன்றைய கூட்டத்திலுள்ள பல மெம்பர்கள் எடுத்துச் சொன்னதிலிருந்தும், ஷை யார் தூஷித்துப் பேசியதைக் குறித்து இச்சங்கம் மிகவும் வருந்துகிறது

என்றும் இது விஷயத்தை கல்வி யிலாகா, டைரெக்டர், கல்வி ஆபீசர், கல்விச் சபை பிரஸிடெண்டு, ஆரம்பக்கல்வி, சுதேசமித்திரன், ஹிந்து முதலிய பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கத் தீர்மானிக்கப் பட்டது.

## சென்னை ஆசிரிய மானேஜர்கள் சங்கம்

1. 25—7—34 திரு. கே. இராமாநுஜம்பிள்ளை யவர்கள் தலைமை வகித்தார். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. சென்னை கர்ப்பரேஷனில் ஆசிரிய மானேஜர்களுக்கு 2 ஸ்தானத்தை அளிக்கும்படி அரசாங்கத்தார் தற்போது சட்ட சபைக்கு வந்துள்ள முனிசிபல் அமெண்டிங்பில்லை, திருத்தவேண்டு மென்பது.

2. அதிக ஜனநெருக்கமுள்ள சென்னையில் எடுகேஷனல் ரூல்ஸ் பிரகாரம், 9 அடி வீதம் ஒரு பிள்ளைக்கு இடம் அளிப்பது எய்டட்பாடசாலைகளில் கூடாத காரியமென்பதை இச்சங்கம் அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்ளுகிறது.

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம் வடஆற்காடு

வேலூர். 27-8-34

இச்சங்கத்தின் நிர்வாகக் கூட்டமொன்று திரு. ராவ்சாஹிப் ஸி. துரைசாமி ஐயர், பி. எ. பி. எல். அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. சில பாடசாலைகளுக்கு கிராண்டுகள் சரிவர கொடாமையைப்பற்றியும், சில பாடசாலைகளை கல்வியதிகாரிகள் அனுவசியமாக அங்கீகாரம் செய்யாமல் விட்டிருப்பதைப்பற்றியும், பல விவாதங்கள் நடந்தன. முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின.

1. எய்டட் பாடசாலைகளுக்கு கிராண்டுத் தொகைகளையும், அங்கீகாரத்தையும் ஜில்லாக் கல்வியதிகாரிகள் சரிவர கொடுக்க வேண்டுமென்பது.

2. கல்விச் சம்பந்தப்பட்ட எல்லா உத்திரவுகளையும் ஸர்குலர்களையும், ஜில்லாக் கல்விச் சபையும் ஜில்லாக் கல்வியதிகாரியும் ஆசிரிய மானேஜர்கள் சங்கத்திற்கு அனுப்பவேண்டு மென்பது.

3. ஆசிரிய மானேஜர்கள் கையொப்ப அனுமதி யில்லாமல், சேம்பியன் ஸ்கீமின் பேரால் எந்த எய்டட் பாடசாலையையும் எடுக்கக் கூடாதென்பது.

4. சங்கத்தின் தலைவர், காரியதரிசி, இன்னும் 3 அங்கத்தினர்கள் சேர்ந்து, டைரக்டர் துரையவர்களையும், கனம் மந்திரியாரவர்களையும் பார்த்து, வட ஆற்காடு கல்விச் சபையில் ஆசிரிய மானேஜர்களுக்கு சீக்கிரம் 2 ஸ்தானங்கள் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது.



## சேலம் ஜில்லா கல்விச் சங்கத்திற்கு ஆசிரிய மானேஜர் பிரதிநிதிகளின் தேர்தல்

சேலம் ஜில்லா எடுகேஷனல் கௌன்சில் தலைவர் திரு. ராவ் சாஹிப், S. P. இராஜமாணிக்கம் பண்டாரம் அவர்களின் தலைமையின் கீழ் 15-8-34 தேதி, சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்களின் சங்கத்தின் மகாசபை யொன்று, ஜில்லா கல்விச் சபைக்கு ஆசிரிய மானேஜர்களின் சார்பாக இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூடியது. இம்முறை தேர்தல் பிரசாரம் போட்டியுடன் நடைபெற்றது. அவ்விரண்டு ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராக மூவர் முன்னின்றனர். தேர்தல் நடைபெற்றதில் அதிகப்படியான ஓட்டுகளால் முதல்வராக திரு. N. வேங்கடரமணன் அவர்களும், இரண்டாவதாக திரு. M. வரதய்யா அவர்களும் சேலம் ஜில்லா கல்விச்சபைக்கு மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மூன்றாவதாக நின்ற திரு S. V. நடேசய்யர் ஒரு ஓட்டு மாத்திரம் பெற்றதால் தோல்வியுற்றார். தேர்ந்தெடுக்கப் பட்ட நண்பர்கள் இந்த ஜில்லாவின் ஆசிரிய மானேஜர்களின் நன்மைக்குத் தங்களாலியன்ற வரையில் உழைத்து வருவார்களென எதிர் பார்க்கின்றோம்.

ஓர் ஆசிரிய மானேஜர்.


## நமது பத்திரிகை ஏஜண்டுகளுக்கு ஓர் அறிவிப்பு

பலர் நமது பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தாதாரர்களை சேர்ப்பதற்கும், கமிஷன் முதலிய விபரங்களை தெரிவிக்கும்படி அடிக்கடி எழுதுகின்றனர். அவர்களுக்கு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகின்ருேம். முதலில் நமது பத்திரிகைக்கு ஏஜண்டாக வேலை செய்ய தகுதியாயுள்ளவர்கள் பெரும்பாலும் ஆரம்பாசிரியர்களாக இருப்பது நலம். யேனெனில் இப்பத்திரிகை பெரும்பாலும் ஆரம்பக்கல்வி யுலகில் உழைக்கும் ஆசிரியர்களுக்கே இது உரியது. ஆசிரியர்களே சந்தாதாரர்களாக சேருவதற்கு அதிகமாக முன்வருவர். ஏனைய பொது மக்களும் இதை வாசிப்பின் எவ்வளவோ நலம் பெருவர். விகடப் பத்திரிகைகளும், நாவல் பத்திரிகைகளும் உலவிவரும் இக்காலத்தில், பொது மக்கள் இத்தகைய கல்வி சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை அதிகம் ஆதரிப்பதென்பது கூடாத காரியம். ஆதலின் ஏஜண்டாக வேலை செய்பவர்கள் ஆரம்பக்கல்வியில் ஒருவாறு சம்பந்தப்பட்டவர்களாக இருப்பின் நொடிப் பொழுதில் அநேக சந்தாதாரர்களைச் சேர்க்கயியலுர். தற்போது ஏஜண்டுகளுக்கு மாத்திரமல்ல எந்த ஆசிரியாரயிருப்பினும் 5 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பின், ஒரு சந்தாத்துகையை இனமாகக் கொடுத்துவிடுகின்ருேம். சாதாரணமாக ஏஜண்டுகளுக்கு 100-க்கு 20 விகிதம் கமிஷன் கொடுக்கின்ருேம். அதிகமாக சந்தாதாரர்களைச் சேர்ப்பின் அன்னுர்களுக்கு இன்னும் அதிகமான கமிஷன் கொடுக்க முன்வந்துள்ளோம். அநேக ஆசிரியர்கள் சந்தாதாரர்களைச் சேர்க்க முன்வருவார்களாக.

மானேஜர்.

---

பாம்புகளை வளர்க்கும் பெண்:— இஸ்தம்பில் மிருக ஆஸ்பத்திரிக்கு ஒரு துருக்கியமாது 12 அடி நீளமுள்ள பாம்பொன்றை சிகிச்சைக்காகக் கொண்டு போன போது அங்குள்ள டாக்டர்கள் திகிலடைந்து போயினர். ஆகவே டாக்டர்கள் வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கு மட்டுமே சிகிச்சை செய்யப்படுமென்றும் இந்தப் பாம்புக்குச் செய்ய முடியாதென்றும் கூறினர். அதற்கு அவள் அது வீட்டில் வளர்க்கப்படுவதுதான் என்றும், இன்னும் ஏழு பாம்புகள் தன் விட்டில் இருப்பதாகவும் கூறினுள்.



# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்

**1. "கக்வா"** — சுக்துவானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப்பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரூ 1
3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனும்

**2. க்லோரோ சாலினல்** — இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா பேதி, வயிற்றுநோய், இவைகளை விரைவில் நீங்கும்.
புட்டி ரூ. 1—4—0

**3. என்னுத் தைலம்.** — ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும்.
புட்டி விலை ரூபா 1 4 0

**4. நியூரல் தைலம்.** — ஒற்றைத்தலைவலி முதல் சகலவிதமான தலைவலிகளையும் நீக்கும். 25 வருஷ அனுபோகமுள்ளது. புட்டி ரூ. 1—4—0 தபால் சிலவு வேறு.

## மருந்து காட்லாக் இனும்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்குமாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

## ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு

கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. தேவதாசர் B. A. L. T. M. T. Sc.,
தாசர் சித்த வைத்தியசாலை,
தின்னனூர், ஆர். எஸ்.

# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. எ. எல். டி. இயற்றியவை.

## கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். எ. இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| கலைமகள் வாசகம் முதல் வகுப்பு | 0 2 0 | | |
| இரண்டாம் வகுப்பு | 0 3 0 | நான்காம் வகுப்பு | 0 5 0 |
| மூன்றும் வகுப்பு | 0 4 0 | ஐந்தாம் வகுப்பு | 0 6 0 |

## கலைமகள் கதாவாசகம்

| | |
|---|---|
| முதல் புத்தகம் விலை .... | 0 2 0 |
| இரண்டாம் புத்தகம் விலை .... | 0 3 0 |

## கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாய்க்கர்.

| | |
|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணு | 0 5 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 0 6 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 0 8 0 |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு ,, | 0 9 0 |

## நீதிக்கட்டுறைக் கோவை

வி. ஞானுதிக்கம், பி. எ. எல். டி.

| | |
|---|---|
| முதல் புத்தகம் அணு .... | 0 4 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 7 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, .... | 0 4 0 |

## இந்து தேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எம். எ., எல். டி.

| | |
|---|---|
| முதற் புத்தகம் விலை அணு .... | 0 4 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 5 0 |

எஸ். ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. எ., எல். டி. எம். ஆர். எ. எஸ்.

| | |
|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணு .... | 0 4 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, .... | 0 5 0 |

## பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். எ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | 0 5 0 | இரண்டாம் புத்தகம் | 0 7 0 |
| மூன்றும் புத்தகம் | 0 6 0 | நான்காம் புத்தகம் | 0 8 0 |
| ஐந்தாம் புத்தகம் | 9 0 0 | | |

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.**
நெ. 2, சகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நாம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைபோல் பாதுகாக்கும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இனும் ! இனும் !! இனும் !!!

**"இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி"**

உடனே விலாசத்தை தெரிவியுங்கள் :

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26, பிராட்வே, மதராஸ்.**

காலஞ்சென்ற ருவ்சாஹிப்
**தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்**
இயற்றிய

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| கமலாட்சி .... .... .... | 1 | 12 | 0 |
| விஜய சுந்தரம் .... .... | 2 | 0 | 0 |
| ஞான சம்பந்தம் .... .... | 1 | 4 | 0 |
| சிவ ஞானம் .... .... | 1 | 4 | 0 |
| ஞானப் பிரகாசம் .... .... | 1 | 12 | 0 |
| ஹரிச்சந்திர (நாடகம்) .... | 1 | 0 | 0 |

**ஆரம்பக் கல்வி புத்தகசாலை,**
**94-95, புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.**

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர் : மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | | | | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, .... | 0 | 3 | 0 | மூன்றும் ,, .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, .... | 0 | 5 | 6 | ஐந்தாம் ,, .... | 0 | 6 | 6 |

## பொற்பாலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 | 5 | 0 | மூன்றும் புத்தகம் | 0 | 8 | 0 |
| இரண்டாம் ,, | 0 | 6 | 0 | நான்காம் ,, | 0 | 9 | 0 |

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் எஜ. எஸ்.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5 ம் வகுப்பு மூன்றும் புத்தகம் | 0 | 5 | 0 |

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றும் புத்தகம் | 0 | 7 | 0 |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 2 | 0 |
| ,, அதிபத்த நாயனர் | 0 | 2 | 0 |
| ,, ஏனதிநாத நாயனர் | 0 | 3 | 0 |
| ,, நந்தனர் | 0 | 5 | 0 |

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**
திருவல்லிக்கேணி, சென்னை.

ரிஜிஸ்டர் நெ. 2912

# தமிழ்க் கடல் பிரசுரங்கள்

3 OCT 1934

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1-வகுப்பு : | ஆரம்ப வாசகம் - I | 2 | 6 |
| 2-வகுப்பு : | ஆரம்ப வாசகம் - II | 3 | 6 |
| 3-வகுப்பு : | ஆரம்ப வாசகம் - III | 4 | 0 |
| | குட்டிக் கதைகள் - முதற் புத்தகம் | 2 | 0 |
| 4-வகுப்பு : | ஆரம்ப வாசகம் - IV | 5 | 0 |
| | குட்டிக் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| | ஆகாய விமானம் | 2 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| 5 வகுப்பு : | ஆரம்ப வாசகம் - V | 6 | 0 |
| | குட்டிக் கதைகள் - மூன்றும் புத்தகம் | 4 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| | பெரிய உலகத்துச் சிறிய பிள்ளைகள் | 5 | 0 |
| I பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - முதற் புத்தகம் | 7 | 0 |
| | சிறுவர் கதைகள் - முதற் புத்தகம் | 3 | 0 |
| II பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - இரண்டாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| III பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - மூன்றும் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - மூன்றும் புத்தகம் | 4 | 0 |
| | உடல் நலம் | 4 | 6 |
| IV பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - நான்காம் புத்தகம் | 10 | 0 |
| | லண்டன் மாநகரம் | 6 | 0 |
| IV பாரம் - | வேல் நாட்டுப் போறிஞர் | 10 | 0 |

## தமிழ்க் கடல் ஆபீஸ்

சாந்தோம் - மயிலை, சென்னை